விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 13 திங்கட்கிழமை (29.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 345




ரா ம் கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


# தமிழ், முஸ்லிம் கட்சிகளுடனான சந்திப்பை இந்திய அமைச்சர் கிருஷ்ணா தவிர்த்தார்

## சூக்குமம் தெரியாமல் குழப்பம்



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, தமிழ்க் கட்சிகளின் அரங்கம் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நேற்றுக் காலை சந்திப்பதாக இருந்த போதிலும் இறுதி நேரத்தில் அச்சந்திப்புக்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த இன்று பிரிட்டன் செல்லவுள்ளார்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று இரவு பிரித்தானியாவுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் ஒன்றியத்தில் அவர் டிசம்பர் மாதம் 2ஆம் திகதி உரையாற்றவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவில் ஆறு நாட்கள் தங்கியிருக்கவுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் அவரின் வெளிவிவகார ஆலோசகர்களில் ஒருவரான சஜின்வாஸ் குணவர்த்தனவும் செல்லவுள்ளார்.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரித்தானியாவுக்கான பயணத்தின் போது பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனை சந்திப் (16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை-பாகிஸ்தான் நேற்று 4 ஒப்பந்தங்களில் கைச்சாத்து!

### யுத்த உதவியை மறவோம் என்றும் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பாகிஸ்தான்-இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டு வர்த்தக ஆணைக்குழுவை பலப்படுத்துவதற்கு இரு நாடுகளின் ஜனாதிபதிகளும் இணக்கம் தெரிவித்துள்ளதுடன் இலங்கைக்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்குவதற்கும் பாகிஸ்தான் முன்வந்துள்ளது.

அதேவேளை பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையில் நான்கு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரிக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகளையடுத்து இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுக்களைக் கொண்டவர்கள் விஸா பெறும் அவசியத்தை நீக்குதல் மற்றும் விவசாய ஒத்துழைப்பு, சுங்க விவகாரங்கள், கலை-புத்தாக்க கல்வி (16ஆம் பக்கம் பார்க்க)

## புதைத்த கண்ணிவெடியில் மூன்று இலட்சம் மீட்பு

(கொழும்பு)

1863 சதுர கிலோமீற்றர் நிலப்பகுதியில் புதைக்கப்பட்டிருந்த 306,000 கண்ணி வெடிகள் இராணுவக் களப் பொறியியலாளர்களால் அகற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவெல தெரிவித்தார்.

அத்துடன் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் கைகளாலும் இயந்திரங்களாலும் கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

யாழ்ப் (16ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் விரைவில் நீக்கப்படும்

### கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

இன்னும் இரண்டு, மூன்று மாதங்களில் அவசரகாலச் சட்டம் நீக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமான தி எக்கனோமிஸ்ட்டிற்கு அளித்த செவ்வியில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவசரகாலச் சட்ட நீடிப்புத் தொடர்பில் உலகின் பல நாடுகளும் கடுமையான விமர்சனங்களை வெளியிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னரும் அவசரகாலச் (16ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பின் மையப் பகுதி சீன நிறுவனத்திடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

கொழும்பின் மையப் பகுதியில் பெருமளவு நிலப்பரப்பை சீன நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் முடிபு செய்துள்ளது. இது குறித்த ஒப்பந்தம் இலங்கையின் நிதியமைச்சில் கடந்த வெள்ளிக்கிழமை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

உலகின் முன்னணி சுற்றுலாக் கைத்தொழில் நிறுவனங்களில் ஒன்றான சீனாவின் சங்கிரிலா நிறுவனம் இப்பகுதியில் 450 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்யவுள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையிலான இந்த ஒப்பந்தத்திற்கு அமைய இலங்கைப் படைத் தலைமையகம் உள்ள இப்பகுதியில் பிரமாண்டமான (16ஆம் பக்கம் பார்க்க)


HIV/AIDS

உலக எயிட்ஸ் தினம் 2010

"HIV/AIDS தொடர்பில் உலகளாவிய வசதிகளை ஏற்படுத்துதலும் மனித உரிமைகளை மதித்தலும்"

- எயிட்ஸ் நோய்க்குக் காரணமான HIV கிருமி தொற்றிய ஒருவர் பல வருடங்கள் வரை நோயாளியென சந்தேகிக்கக் கூடிய அறிகுறிகள் எதுவுமின்றி சாதாரணமான ஒருவரைப் போல் இருக்கமுடியும்.
- இதனால் HIV தொற்றுள்ளவரை வெளித் தோற்றத்தை வைத்து கண்டு பிடிக்க முடியாது. எனவே முறையற்ற ஆபத்தான பாலியல் தொடர்புகள் உங்களையும் எயிட்ஸ் நோயாளிகளாக்கலாம்.
- யாழ்.குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பல்வேறு மாற்றங்கள் HIV தொற்றுக்கள் பரவக்கூடிய சந்தர்ப்ப சூழ்நிலைகள் அதிகரித்து வருகிறது.

"HIV/AIDS - எங்களது பாதுகாப்பு எமது கைகளிலேயே"

ஆக்கம்: சுகாதார சேவைகள் திணைக்களம்,யாழ்ப்பாணம். அனுசரணை: Unicef

(IB-1700)

# புலிகளின் சர்வதேசத் தலைவர் புலனாய்வுப் பிரிவால் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பைச் சேர்ந்த சிரேஷ்ட தலைவர் ஒருவர் கொழும்பில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முதலீட்டாளர் என்ற போர்வையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது அரச புலனாய்வுப்பிரிவினர் குறித்த நபரை கைதுசெய்துள்ளதாக படைத்தரப்பை ஆதாரங்காட்டி கொழும்பில் செய்திகள் வெளியாகியுள்ளன.

கிரன் என்ற அழைக்கப்படும் குறித்த சிரேஷ்ட தலைவர் புலிகளின் சர்வதேச வலையமைப்பு நிதிக்கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடையவர் என அந்தச் செய்திகளில் கூறப்பட்டுள்ளது.

கொழும்பின் முக்கிய ஹோட்டல் ஒன்றில் வைத்து குறித்த சந்தேகநபரை புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

அவுஸ்திரேலியா மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் நிதி திரட்டும் நடவடிக்கைகளில் குறித்த நபர் ஈடுபட்டு வந்ததாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

1999 ஆம் ஆண்டு முதல் அதிகமாகத் தேடப்பட்டுவரும் குற்றவாளிகள் பட்டியலில் கிரனின் பெயர் முக்கிய இடத்தை வகித்துவந்ததாகவும் அந்தத் தகவல்களில் குறிப்பிடப்படுகிறது.

தெனியாய பிரதேசத்தில் குறித்த நபருக்கு தேயிலைத் தோட்டம் ஒன்று உள்ளதாகவும் தப்பிச் சென்ற விடுதலைப்புலி உறுப்பினர்கள் முதலீட்டாளர்கள் என்ற போர்வையில் மீண்டும் நாடுதிரும்பி வருவதாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக கூறப்படுகின்றது. (ந-5)

# ஐ.தே.கூட்டமைப்பிலிருந்து சரத் மனமேந்திரா நீக்கம்

(கொழும்பு)


சரத் பொன்சேகாவின் தலைமையிலான ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் சரத் மனமேந்திரா கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

நிறைவேற்றுக் குழு உறுப்பினராக சரத் மனமேந்திராவை கட்சியிலிருந்தி நீக்கியதாக ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் கொள்கைக்குப் புறம்பாக செயற்பட்ட காரணத்தினால் அவரை கட்சியிலிருந்து நீக்குவதற்கு நிறைவேற்றுக்குழு தீர்மானித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியுடனோ அல்லது அரசாங்கத்துடனோ இணையப்போவதில்லை என சரத் மனமேந்திரா குறிப்பிட்டுள்ளார்.

கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும் போராட்டத்தை கைவிடப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)



இலங்கைக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று அலரி மாளிகையில் சந்தித்து உரையாடியபோது...

# யாழ்.மாவட்ட இசுறு பாடசாலைகள் வேலைகளை ஆரம்பிக்க அரசு அனுமதி

(திருகோணமலை)

யாழ்.மாவட்டத்தில் இசுறு பாடசாலைத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 4 பாடசாலைகளின் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிப்பதற்கான அனுமதி கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தகவல் தருகையில்,

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுடன் கல்வி அமைச்சினால் இசுறு பாடசாலைத்திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் 5 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன.

இதில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் அபிவிருத்திப் பணிகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டது. இந்நிலையில் யாழ்.புத்தூர் சோமஸ் கந்தாக் கல்லூரி, வரணி மகாவித்தியாலயம், சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகிய 4 பாடசாலைகளுக்கான அனுமதி கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த 4 பாடசாலைகளின் முதற் கட்டப்பணிகள் 66.509 மில்லியன் ரூபாய் பணியில் மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே மேற்படி நான்கு பாடசாலைகளும் தமது அபிவிருத்திப் பணிகளை உடன் ஆரம்பிக்குமென அவர் குறிப்பிட்டார். (ந-5)

# கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு ஆசிரியர் விடுதிகள் அமைக்கப்படும்

## கொரிய நிறுவனம் பொறுப்பேற்றது

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் 4 பிரதேச செயலர் பிரிவுகளில் ஒவ்வொரு ஆசிரியர் விடுதிகளை அமைத்துக் கொடுப்பதற்கு கொரிய நிறுவனமான கொய்க்கா முன்வந்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் 30 பாடசாலைகளை முழுமையாக புனரமைப்பதற்கு கொரிய நிறுவனமான கொய்க்காவிடம் வடக்கு மாகாணக்கல்வி அமைச்சினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த வாரம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த கொய்க்கா நிறுவனத்தின் தலைவர் ஷா தலைமையிலான குழுவினர் பாடசாலைகளின் நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

இதனைத் தொடர்ந்து கல்வியமைச்சில் கொய்க்கா நிறுவனத்தினருக்கும், கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்குமிடையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இக் கலந்துரையாடல் தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் தகவல் தருகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் வகுப்பறைக் கட்டிடத்தொகுதியை கொய்க்கா நிறுவனம் முழுமையாக அமைக்கவுள்ளது.

அத்துடன் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் கேட்டுக் கொண்டதற்கமைய கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு ஆசிரியர் விடுதிகளையும் அமைத்துக் கொடுப்பதற்கு கொய்க்கா நிறுவனம் முன்வந்துள்ளது.

இதற்கமைய பளை, கரைச்சி, கண்டாவளை மற்றும் பூநகரி பிரதேச செயலகப் பிரிவுகளின் மையப் பகுதிகளில் இவ் ஆசிரியர் விடுதிகள் அமைக்கப்படுமென வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்தார். (ந-5)

# இலங்கை கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்கு சவுதி அரேபியாவிற்கு அனுமதி

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் மீன் பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு சவுதிஅரேபியாவிற்கு அனுமதி வழங்கத் தீர்மானித்துள்ளதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் ஆழ் கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்கு சவுதி அரேபிய வள்ளங்களுக்கு அனுமதி அளிக்கப்படவுள்ளது.

சவுதி அரேபியாவின் 400 வள்ளங்களுக்கு மீன் பிடிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் என மீன்பிடி வள அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பிடிக்கப்படும் மீன் வகைகளில் 20 வீதம் இலங்[illegible]க்கு கிடைக்கப்பெறும் எனவும் இது தொடர்பான ஒப்பந்தம் எதிர்வரும் டிசம்பர் மாதம் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

# விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஆட்டோ, மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் யாழ். பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் கல்வியங்காட்டைச் சேர்ந்த ப.வசந்தகுமார் (வயது-34) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-6)

# மின்சாரம் தாக்கியதில் இளைஞர் படுகாயம்

(கரவெட்டி)

மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒருவர் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசரசிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவத்தில் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த ம.கிருஷ்ணன் (வயது-26)என்பவரே பாதிக்கப்பட்டவராவார். இச்சம்பவம் நேற்று முன்தினம் கரவெட்டியில் இடம்பெற்றுள்ளது. (ந-6)

# ஐயப்பன் ஆலயத்தில் மகோற்சவம் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தின் மகோற்சவ நிகழ்வுகள் நாளைக்காலை ஆரம்பமாகி எதிர்வரும் 11 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

மகரஜோதி தர்சனம் பெறவிருக்கும் மாலை அணிந்த சுவாமிமார்கள், அடியார்கள் அனைவரும் பங்குபற்றுவர்.

அத்துடன் சபரிமலை ஐயப்பனுடைய ஆலயத்தில் இடம்பெறும் கிரிகைகள், நிகழ்வுகள் போன்று வழிபாடுகள் இங்கும் நடைபெறுமென தேவஸ்தானம் அறிவித்துள்ளது. (ந-7)

# வன்னியில் மீள்குடியேறிய மக்களின் வங்கிக் கணக்குகளில் ரூபா.3500 மில்.

## தமிழ் அரங்கத்திடம் ஜனாதிபதி கூறினார்

(கொழும்பு)

வன்னியில் மீள் குடியேற்றப்பட்ட மக்கள் தமது வங்கிக் கணக்குகளில் 3500 மில்லியன் ரூபாய்களை வைப்புச் செய்திருந்ததாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமையன்று தம்மை சந்தித்த தமிழ்க்கட்சிகளின் அரங்கத்திடம் ஜனாதிபதி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இடம்பெயர்ந்து மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டுமென தமிழ்க்கட்சிகளின் அரங்கம் கூறியபோதே ஜனாதிபதி இந்தத் தகவலை வழங்கியுள்ளார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்தநாளான நவம்பர் 26 ஆம் திகதி இச்சந்திப்பு இடம்பெற்ற நிலையில் மறைந்த தலைவரின் பிறந்தநாளை முன்னிட்டு தாம் தமிழ்க்கட்சிகளின் அரங்கப் பிரதிநிதிகளுக்கு விருந்தளிப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தை தோல்வியில் முடிபடைந்துள்ளதாக தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் எனினும் மனம் தளரவில்லை எனக் குறி ப்பிட்டுள்ளார்.

தமது 8 அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்ற சிறிது காலம் எடுக்குமென ஜனாதிபதி குறிப்பிட்டதாகவும் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். (ந-5)


செல்லா சினிமா(நாதன்ஸ்)




காட்சி நேரம்:- 10.30,2.30,6.30,9.30



ஆனந்தி திருமண சேவை

**மணமகள் வேண்டும்**

1980ல் பிறந்த கார்த்திகை நட்சத்திரம் கிரகபாவம் 40, செவ்வாய் தோஷமில்லை. உயரம் 5அடி6 அங்; NCT கற்றவர். UNOPES- நிறுவனத்தில் பணிபுரிபவருக்கு உள்நாட்டில் மணமகள் தேவை.

தொடர்பு: V.A. சிவராசா ஜோதிடர்
56, அம்மன் ரோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P. 0212228708

(3138)

# இன்று ஒரு தகவல்

## கர்வம்

ஒரு தீக்குச்சி, தீப்பெட்டியைப் பார்த்துக் கேட்டதாம்.

"நாம இரண்டு பேரும் உரசிக்கொள்கிறோம். ஆனால் நான் மட்டும் தீப்பிடித்து எரிந்து போகிறேன். நீ அப்படியே இருக்கிறாயே" என்றதாம். அதற்குத் தீப்பெட்டி சொல்லியதாம்.

"உனக்குத் தலையில கனம் இருக்கு.... அதனால அழிந்து போகிறாய்?" என்றதாம்.

எப்படி இருக்கிறது இந்தப் பதில்?

தலையில் கனம் உள்ளவர்கள் யாருமே சரியாக இருக்க முடியாது. எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் சரி கர்வம் என்பது கூடவே கூடாது.

இதை விளக்குவதற்கு பகவான் சத்யசாயி பாபா ஒரு சம்பவத்தைச் சொல்லியிருக்கிறார்.

அர்ஜுனன் தீர்த்த யாத்திரை மேற்கொண்டு தென்னிந்தியாவுக்கு சென்றானாம்.

இராமேஸ்வரத்துக்கு சென்றபோது அங்கே இலங்கைக்கு கற்களை அடுக்கி போடப்பட்டிருந்த பாலத்தைப் பார்த்தானாம். ஒரு சின்ன குரங்கு அதற்குப் பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்தது.

அதைப் பார்த்து அர்ஜுனன் சிரித்திருக்கிறான்.

"ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டது அந்தக் குரங்கு.

"இராமன் மிகச் சிறந்த வில்வீரன் அப்படி இருக்கும் போது அவன், இலங்கைக்கு அம்புகளாலேயே ஒரு பாலம் கட்டியிருக்கலாமே! அதை விட்டுட்டு, போயும் போயும் உன்னை மாதிரி குரங்குகளைத் துணையாக வைத்துக் கொண்டு இப்படி ஒரு கருங்கல் பாலத்தைக் கட்டியிருக்கிறானே!" என்றான்.

"அம்புகளால் பாலம் கட்ட முடியுமா?" என்று கேட்டது குரங்கு.

"ஏன் முடியாது என்னால் முடியுமே" என்றான் அர்ஜுனன்.

"அம்பால் பாலம் கட்டலாம்... இருந்தாலும் என்னை மாதிரி குரங்குகள் ஏறி நடந்தால்.... அது தாங்குமா? அதனாலே தான் இராமர் கருங்கல் பாலம் கட்டினார் போல இருக்கு!" அப்படி என்றது குரங்கு!

"அப்படியா சொல்றே! நான் வேணும்னா இப்போ அம்புகளாலேயே பாலம் கட்டுறேன்!

நீ அது மேலே ஏறி நடந்து பார்.

பாலம் விழுந்துட்டு துன்னா.... நான் தீமூட்டி அதுலே குதிச்சு உயிர்த்தியாகம் பண்ணிடிறேன்.!" என்றான் ரொம்ப கோபமாக! உடனே அந்த சின்னக் குரங்கு பெரிய உருவம் எடுத்துட்டதாம்.

கையிலே கெதையோட அர்ஜுனன் முன்னாடி நிற்கிறான் அனுமன். அர்ஜுனன் தனது காண்டீபத்தை எடுக்கிறான். சரமாரியாக அம்புகளை விடுகிறான்.

அதெல்லாம் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து பாலமாக அமைகிறது.

அர்ஜுனன் தலைநிமிர்ந்து நின்றான் அனுமன் உயரே கிளம்பி.... அங்கே இருந்த பாலத்தில் வந்து இறங்கினான். பாலம் நொறுங்கிப் போனது.

"என்ன அர்ஜுனா இப்ப என்ன செய்யப் போகிறாய் என்றான் ஏளனமா!

அர்ஜுனன் தலையை தொங்கப் போட்டு கொண்டான். சொன்னபடி தீமூட்டச் சொன்னான். அதிலே குதிப்பதற்காக மூன்று முறை சுற்றி வந்தான்.

அப்போது கிருஷ்ணர் அங்கே தோன்றினார்.

"என்ன அர்ஜுனா என்ன நடந்தது?" என்றார் ஒன்றும் தெரியாதது போல!"

அர்ஜுனன் வாயைத் திறக்கிறத்திற்கு முன்னாடி அனுமன் வாயைத் திறந்தான். நடந்ததைச் சொன்னான்.

அர்ஜுனன் சவால் விட்டபடி உயிர் துறந்தே ஆகணும் என்றான் அனுமன்.

கிருஷ்ணர் யோசித்தார்.

"நல்லது! இந்த சவால் விட்டதற்கும்.... நடந்ததற்கும் யார் சாட்சி? பெரியவர் ஒருவரை வச்சிக்கிட்டு அல்லவா இந்த போட்டி நடந்திருக்க வேண்டும் என்றார்.

"அதனாலே என்ன? இப்ப மறுபடியும் அந்த போட்டியை நடத்திவிடால் சரி. என்னால் அந்த அம்புப் பாலத்தை நொறுக்க முடியாதா?" என்றான் அனுமன்.

'சரி.... இப்ப மறுபடியும் அது நடக்கட்டும் என்றார் கிருஷ்ணர். அர்ஜுனன் அம்புப்பாலம் அமைத்தான். அனுமன் ஏறிக்குதித்தான். பாலம் அசையவில்லை! இப்பொழுது அனுமன் தலையைக் குனிந்தான். அர்ஜுனன் நன்றியோட நிமிர்ந்து பார்த்தான்.

கிருஷ்ணரின் தோள்களிலும் முதுகிலும் இரத்தம்!

"என்ன சுவாமி? என்ன நடந்தது?" என்றான் பதறிப்போய்!

"உன் அம்புப் பாலத்தை நான் தான் முட்டுக் கொடுத்து தாங்கினேன். அனுமன் குதித்த போது என்மேல் ஏற்பட்ட காயங்கள் இவை! பின்.... உன்னுடைய அம்புப் பாலத்தினால் பாலம் நின்றது என நினைக்கிறாயா? என்றார்.

முதலில் அர்ஜுனன், அடுத்து அனுமன் ரெண்டுபேரும் கர்வபங்கம் ஆகிவிட்டார்கள். அவர்களிடம் இறந்த கர்வம் போய்விட்டது. யாராக இருந்தாலும் கர்வம் கூடாது என்பது இதில் இருந்து புலப்படுகிறது.

இந்தக் காலத்தில் நாங்கள் எல்லாம் எந்த விடயங்களுக்கெல்லாம் கர்வப்படுகிறோம்!

இரண்டு பெண்கள் தங்களுடைய கணவன்மார்களைப் பற்றி ரொம்ப பெருமையாக பேசினார்கள். அதில் ஒருவர் என் வீட்டுக்காரரிடம் எந்த விடயத்தை கொடுத்தாலும் சரி.... அந்த விடயத்தைப் பற்றி அழகாக ஒரு மணி நேரம் பேசுவார் அப்படி என்றார்.

உடனே இன்னொரு பெண்: "அது என்ன பிரமாதம்? என் வீட்டுக் காரருக்கு விடயமே வேண்டாம். விடயமில்லாமலே நாள் பூரா பேசிக்கிட்டிருப்பார் என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சீரற்ற நிலையில் வன்னிப்பாடசாலைகள்

## மழையினால் ஆண்டிறுதிப் பரீட்சை பாதிப்பு

(கிளிநொச்சி)

வன்னிப் பகுதியில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் பெருமழையின் காரணமாக பல பாடசாலைகள் இயங்க முடியாத நிலை ஏற்றபட்டுள்ளது.

இதனால் ஆண்டிறுதிப் பரீட்சையை நடாத்துவதிலும் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையை நடத்துவதிலும் இடர்பாடுகள் உருவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வன்னிப்பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் 60 வீதமானவை சீரற்ற கூரை மற்றும் கட்டட வசதிகள் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

மழை இல்லாத காலங்களில் மர நிழலின் கீழே நடத்தப்பட்டு வந்த வகுப்புக்களை மழைக் காலத்தில் நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் ஆண்டிறுதிப் பரீட்சையை நடத்துவதற்கு தாம் கூடுதல் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக குறிப்பிட்ட பாடசாலைகளின் அதிபர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தாம் வலயக் கல்விப் பணிமனைகளின் கவனத்திற்கு தெரியப்படுத்தியிருப்பதாகவும் இதன்படி பாடசாலைகளில் சுழற்சி முறையிலான வகுப்புக்களை நடத்துவதற்கு தாம் அனுமதியைக் கோரவுள்ளதாகவும் அதிபர்கள் கூறுகின்றனர். (ச-2-5)

## அரச ஈட்டு முதலீட்டு வங்கி இன்று யாழில் திறப்பு

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் யாழ்ப்பாணக் கிளை இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இல 127, ஸ்ரான்லி வீதியில் வங்கியின் தலைவர் ஜகத் வெள்ளவத்தை தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது. (எ)

## பொறுப்புக்களை பகிர்ந்து கொள்வதில் அமைச்சர்களுக்கு இடையில் குழப்பம்?

பொறுப்புக்களை பகிர்ந்து கொள்வதில் அமைச்சர்களுக்கு இடையில் குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட புதிய அமைச்சரவையின் துறைகளைப் பகிர்வதில் இந்தக் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

ஒன்றுக்கு மேற்பட்ட அமைச்சர்கள் அல்லது அமைச்சுக்கள் ஒரே துறைக்கு உரிமை கோருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

குறிப்பாக அமைச்சுக்களுடன் தொடர்புடைய அரசாங்க நிறுவனங்களின் மீது உரிமை கோருவதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது.

அமைச்சர்கள், சிரேஷ்ட அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட பலரிடையே இந்தக் குழப்ப நிலைமை தொடர்வதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஜனாதிபதி நிதி அமைச்சுப் பொறுப்பை வகிக்கும் அதே வேளை, சர்வதேச நிதி ஒத்துழைப்பு தொடர்பான சிரேஷ்ட அமைச்சுப் பொறுப்பு சரத் அமுனுகமவிற்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பல அமைச்சுக்களில் துறைகளையும் பொறுப்புக்களையும் பகிர்ந்து கொள்வதில் முரண்பாடு காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. (ச-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 100 | 80 |
| தக்காளி | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 |
| கோவா | 60 | 60 | 60 |
| கரட் | 50 | 80 | 80 |
| பூசணி | 50 | 40 | 50 |
| புடோல் | 40 | 50 | 50 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 180 | 150 | 140 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 110 |
| பாகற்காய் | 140 | 40 | 160 |
| வெண்டிக்காய் | 30 | 50 | 40 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 60 |
| பயற்றங்காய் | 140 | 120 | 150 |
| லீக்ஸ் | 120 | 120 | 130 |
| பீற்றூட் | 70 | 60 | 70 |
| கறிமிளகாய் | 150 | 140 | 130 |
| முருங்கைக்காய் | 250 | - | 200 |
| போஞ்சி | 100 | 120 | 130 |
| கத்தரிதம்புள்ள | 60 | 90 | 50 |
| கீரை – 1 பிடி | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 40 |

# இராசி பலன்

**29.11.2010**
**(கார்த்திகை 13, திங்கட்கிழமை)**
**அட்டமி பிற்பகல் 12.37 மணி வரை**
**பூரம் பின்னிரவு 2.00 மணி வரை**
**இராகுகாலம் 7.43-9.13 மணி வரை**
**சுபநேரம் 12.13-1.43 மணி வரை**
**இரண்டாம் கார்த்திகை சோமவாரம்.**
**அட்டமி – நவமி**

**மேடம்** புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சி வெற்றி பெறும், பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**இடபம்** வாகன யோகம் உருவாகும், பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், விருந்தினர் வருகை அதிகரிக்கும், சுபசெய்திகள் வந்து சேரும் நாள்.

**மிதுனம்** வருமானம் திருப்தி தரும், இழுபறியாக இருந்த பிரச்சினைகளில் வெற்றி கிடைக்கும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, புதிய நண்பர்களின் சந்திப்புக் கிட்டும்.

**கடகம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில சம்பவங்கள் நடைபெறலாம், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் வந்து சேரும், நன்மைகள் நடைபெறும் நாள்.

**சிங்கம்** அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிவீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, தேவையற்ற கற்பனைகள் அதிகரிக்கும், நண்பர்கள் மனந்திறந்து பழகுவார்கள்.

**கன்னி** பிரயாணங்களால் அலைச்சல் அதிகரித்தாலும், சிறு ஆதாயமும் கிடைக்கும், தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், சுபவிரயங்கள் ஏற்படும் நாள்.

**துலாம்** தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பொருளாதார வளம் அதிகரிக்கும், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்** சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், பயணங்களால் பலன் கிடைக்கும், பணத்தேவைகள் பூர்த்தியாகும், கௌரவமான நாள்.

**தனுசு** சாமர்த்தியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள், அரைகுறையாக இருந்த வேலைகளை ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபம் விலகும்.

**மகரம்** கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், அலைச்சல் அதிகரிக்கும், தேக நலனில் கவனம் தேவை.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வாய்ப்புண்டு.

**மீனம்** எதிரிகள் உதிரியாகும் நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும், செய்தொழிலில் ஆர்வம் கூடும், எடுத்த காரியங்கள் கைகூடும், பணவரவு திருப்தி தரும்.


வளவன்

# அமைச்சர் கிருஷ்ணாவின் யாழ்.வருகை

# தமிழருக்கு விமோசனம் தருமா ?



எஸ்.எம்.கிருஷ்ணா - ஜனாதிபதி மஹிந்த




## இலங்கையில் ஆழஊடுருவுவதில் வீறு கொண்டுள்ள இந்தியா

அகிம்சைப் போராட்டம் பின் ஆயுதப் போராட்டம் இடையிடையே பேச்சுவார்த்தை, யுத்தம் என்ற பட்டோலைப் படிப்பில் ஈழத் தமிழர்கள் பட்ட துன்ப துயரம் ஏராளம்.

தந்தை செல்வநாயகத்தின் காலத்தில் தமிழர்களின் உரிமைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என நம்பப்பட்டது. தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணத் தவறினால், எதிர்காலத்தில் எங்கள் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவார்கள் என்று தந்தை செல்வநாயகம் பாராளுமன்றில் ஆற்றிய உரை, பின்னாளில் அது நிஜமாய்ப்போன நிதர்சனங்கள்.

தமிழ் மக்களை இறைவன் தான் காப்பாற்ற வேண்டுமென்ற தந்தையின் இறுதிக்கால வார்த்தைகள் அந்த யதார்த்தத்தின் அனுபவிப்புகள் என்றவாறு எல்லாம் அடங்கிப்போக, இப்போது உள நிலையில் தமிழ் மக்கள் போராடிக் கொண்டிருக்கும் அவலநிலையே மிஞ்சியுள்ளது. சமகாலத்தில் நடந்தேறும் திட்டமிட்ட குடியேற்றங்கள், பௌத்தபிரானின் பிரதிஷ்டைகள், இந்துக்களின் புனித பிரதேசங்களில் வேண்டுமென்றே விஷமத்தனம் புரியும் செயற்பாடுகள் என அனைத்தும் தமிழ் மக்களின் மனங்களை ரணமாக்கிவிட,

மௌனம் ஒன்றே வழி என்றவாறு தமிழ் மக்கள் அமைதி கொள்கின்றனர்.

வன்னியில் மிகப் பெரியதொரு யுத்தம் நடத்தி அதில் வெற்றி கண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் கடமைப்பாட்டையும் கொண்டுள்ளார்என்பதுபொதுவானகருத்து.

ஆனால், இலங்கை ஆட்சியாளர்களோ தமிழர்களின் பிரச்சினைக்குத் தாமாகவே முன்வந்து தீர்வு காண ஒருபோதும் முற்பட்டிலர்.

எனவே, தமிழ் மக்களின் நிலையுணர்ந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என யாரேனும் நம்புவார்களாயின் அது மகாதவறு.

### அழுத்தம் தேவை

விடுதலைப்புலிகள் போராடிய காலத்தில் பேச்சுவார்த்தையின் தேவைப்பாடு இருந்தது. ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு விடுதலைப்புலிகள் பேசவரவேண்டுமென்ற அழைப்பும் இலங்கை அரசுகளால் விடுக்கப்பட்டமை கண்கூடு.

ஆனால் இப்போது அத்தகைய பேச்சுவார்த்தைகள் பற்றிய நினைப்பு எதுவும் அரச தரப்பிடம் இல்லை.

அழுத்தம் எதுவும் இல்லையெனில் அதுபற்றி கவனம் செலுத்தாமை இயல்பு என்பதால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பது கட்டாயமானதாகும்.அந்த அழுத்தத்தை யார் கொடுப்பது. தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் சக்தியற்றவர்களாகி விட்டனர்.எனவே அவர்கள் எதுவும் செய்ய முடியாதென்பது தெளிவு.

ஆக, இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு அழுத்தம் கொடுக்கும் தார்மீகப் பொறுப்பு இந்திய தேசத்திற்கு மட்டுமே உண்டு. இந்தியா அழுத்தம் கொடுக்கும் என்ற எதிர்பார்ப்பும் தமிழ் மக்களிடம் இருப்பதை மறந்துவிட முடியாது.


நிலைமை இதுவாக இருக்கையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு இந்திய தேசம் இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதற்கான அவசியப்பாடுகள் ஏதேனும் உண்டா? எனில் அதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை.

விடுதலைப்புலிகளை ஒழித்துக் கட்ட வேண்டுமென்பதில் மிகவும் உறுதுணையாக இருந்த இந்திய மத்திய அரசு ஒட்டுமொத்த ஈழத்தமிழர்களையும் விடுதலைப் புலி ஆதரவாளர்களாகவே கருதுகின்றது.

அத்தகையதொரு கருத்து நிலையின் அடிப்படையிலேயே விடுதலைப்புலிகள் மீதான தடையை மேலும் இரு வருட காலத்திற்கு அந்த நாடு நீடித்தது.

நிலைமை இதுவாக இருக்கையில் தனது கணவரின் மரணத்தை சதா நினைக்கும் சோனியா காந்தியும்,தங்களின் தந்தைக்கு ஏன் இந்த நிலை ஏற்பட வேண்டும் என ஏங்கும் ராகுலும் பிரியங்காவும்.

ராஜீவ்காந்தியின் படுகொலை தமிழ் நாட்டில் நடந்தது மிகப் பெரும் பழி எனக் கருதும் தமிழகத் தலைவர்களும்,



பாக்.ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி - ஜனாதிபதி மஹிந்த

ஒருபோதும் ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு தேவை என உள்ளார்ந்தமாக நினைக்கவோ! இலங்கை அரசிடம் வலியுறுத்தவோ! போவதில்லை என்பது சர்வ நிச்சயம்.

தமது அரசியல் சூழமைவுக்கு ஏற்ப சில வேளைகளில், சம்பிரதாயக் கருத்துக்களை தமிழகம் தெரிவித்தாலும் அதற்கு ஒரு எல்லையிடலும் சுயநோக்கமும் உண்டென்பதை நாம் மறந்து விடலாகாது.


### கள நிலை மாற்றம்

ராஜீவ் காந்தியின் கொலைச் சம்பவத்தைப் போன்றதொரு மிகமோசமான வேலையை இலங்கை அரசு இந்திய தேசத்திற்கோ அன்றி சோனியாவின் குடும்பத்திற்கோ செய்யவில்லை என்பதால், தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் என வலியுறுத்துவதில் ஏனோதானோ என்ற போக்கைக் கடைப்பிடித்த இந்திய மத்திய அரசுக்கு, இப்போது மிகப் பெரியதொரு இடுக்கண் ஏற்பட்டுள்ளது.

ஆம், எப்போதுமே தனது கட்டுப்பாட்டிற்குள் இருக்கவேண்டுமென நினைத்திருந்த இலங்கை, தற்போது தனது அரசியல் எல்லைக்குள் சீனாவையும், பாகிஸ்தானையும் உள்நுழைய அனுமதித்தாயிற்று.

விடுதலைப்புலிகளுடனான போரில் இலங்கை அரசுக்குத் தாராளமாக உதவி வழங்கிய இந்தியா இப்படியொரு மோசமான திட்டத்தை இலங்கை எடுக்கும் என நினைத்திருக்கவில்லை.

ஏதோ! நடந்தாயிற்று.அதற்காக விட்டு விட முடியுமா என்ன? என்று நினைத்த இந்தியா! இலங்கைக்குள் வேகமாக நுழையும் வியூகத்தை அமைத்தது.



ஜனாதிபதி மஹிந்த -சீனப் பிரதமர் வென்ஜியாவோ

**விதுரன்**

அதன் ஒரு அங்கமே இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் உதவி அலுவலகம் யாழ்ப்பாணத்தில் இயங்குவதும் அதற்காக இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்ததுமாகும்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த கிருஷ்ணாவின் நாடித்துடிப்பு எங்ஙனம் இருந்ததென்பதை தொடர்ந்து பார்க்கலாம்.

# மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்கவுக்கு குஷி சர்வதேச சமாதான விருது

## பிலிப்பைன்ஸில் பிரமாண்ட விழா



மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க யாழ்ப்பாண மக்களுக்கு அவர் களின் வாழ்க் கைத் தரத்தை உயர்த்தும் வகையில் வழங் கிய அர்ப்பணிப்புடன் கூடிய சேவைக்காகவும் சமாதானம் மற்றும் இனங்களுக்கு இடை யிலான சக வாழ்வுக்கு வழங் கிய பங்களிப் புக்காக இந்த மதிப்பு மிக்க விருதை குஷி பவுண்டேஷன் அவருக்கு வழங்கியது.

யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜயர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுக்கு 2010 ஆம் ஆண் டுக்கான குஷி சர்வதேச சமாதான விருது வழங்கப்பட்டுள்ளது.

இவரோடு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 18 பேர் இந்த விருதினைப் பெற்றுக் கொண் டனர்.

இது தொடர்பான பிரமா ண்டமான விருது விழா, பிலிப் பைன்ஸ் தலைநகரமான மனிலாவில் அமைந்துள்ள சர்வதேச மாநா ட்டு மண்டபத் தில் கடந்த 24 ஆம் திகதி நடைபெற்றது.

குஷி சமாதான விருது சமூகத்துக்கு எடுத்துக்காட் டான உத்தமர்களுக்கு அல்லது சமாதான மற்றும் மனித உயிர்க ளுக்கான மதிப்பு, கௌரவம் என்பவற்றை நிலை நாட்ட பாடுபட்டவர்களுக்கு வழங்கப்படு வதாகும்.

குஷி பவுண்டேஷன் இந்தப் விருதினை கடந்த 2002 ஆம் ஆண்டிலிருந்து வழங்கி வருகிறது. கௌரவ பெரி எஸ். குஷி இந்தப் பரிசை வழங்கி வருகிறார். அவரது காலஞ் சென்ற தந்தையான கப்டன் ஜெமெனி யானோ ஜாவியா குஷி ஞாபகமாக இதை அவர் வழங்கி வருகிறார்.

ஆசியாவின் சமாதானத்துக்கான நோபல் விருது எனக் கூறக்கூடிய குஷி சமா தானப் பரிசை ஏற்றுக் கொண்ட மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கதான் இவ்வாறான சேவையை யாழ்ப்பாண மக்களுக்கு வழங்க வழிகாட்டிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார்.

அத்துடன் அவர் அந்த விருதை பெற்ற தற்கான பெருமையைத் தனக்கு உதவிய இராணுவ உத்தியோகத்தர்களுடன் பகிர்ந்து கொள்வதாகக் கூறினார். (ச-5-2)

## தங்கத்தை கடத்திய வெளிநாட்டுப் பிரஜை கைது

53இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத் தை சட்டவிரோதமாக நாடு கடத்த முயற்சித்த வெளிநாட்டு பிரஜை ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுங்கப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

குறிப்பிட்ட வெளிநாட்டுப் பிரஜை சிங்கப் பூருக்கு செல்வதற்காக விமான நிலையத்துக்கு வந்து இருந்தமை தெரியவந்துள்ளது.

சட்டவிரோதமாக தங்கத்தை நாடு கடத்த முயற்சித்த வெளிநாட்டுப் பிரஜைக்கு 5இலட் சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவரிடம் இருந்த தங்கம் அரசுடமையாக்கப்பட்டதாக விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலும் குறிப்பிட்டுள் ளார்கள். (ச-2)

## தவறுதலாக குளத்தில் விழுந்த சிறுமி பலி

யாழ். ஊர்காவற்துறை நாரந்த னையில் சிறுமி ஒருவர் குளத்தில் விழுந்து பலியாகி யுள்ளார். இச்சம்பவம் நேற்று பிற்பகல் இடம் பெற்றுள்ளது.

நேசன் தர்ஷினி (வயது 8) என்ப வரே இவ்வாறு பலியாகியுள்ளார். இவரின் சடலம் நாரந்தனை வைத்திய சாலையில் வைக்கப் பட்டுள்ளது. (2)

# தொடரும் காலநிலை சீர்கேடு நாட்டில் டெங்குநோய் அபாயம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கால நிலை சீர்கேடு காரணமாக டெங்குநோய் தொற்று ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக சுகாதார அமைச்சு எச்சரித் துள்ளது.

இதன்காரணமாக பொதுமக்கள் அவதா னத்துடன் செயற்படுமாறு சுகாதார அமைச் சின் தொற்று நோய் பிரிவு வைத்தியர் சுதத் பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் பல பாகங்களிலும் பெய்துவரும் மழையுடனான காலநிலையை கருத்திற் கொண்டு டெங்கு நோய் தொற்று ஒழிப்பு வாரம் ஒன்றைப் பிரகடனப்படுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி டிசம்பர் மாதம் 1ஆம் திகதியிலிருந்து ஒரு வார காலப்பகுதியை டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட் டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே டெங்கு நோய் தொற்று வட- கிழக்கு மாகாணங்களிலே அதிக அள வில் பரவுவதற்கான ஏதுநிலை காணப்படு வதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவு வைத்தியர் சுதத் பீரிஸ் தெரிவித்துள் ளார். (ச-5)

# வெள்ளத்தால் போக்குவரத்து பாதிப்பு

(பூநகரி)

தருமபுரம்- சுண்டிக்குளம் வீதியில் தம்பி ராசபுரம் அ.த.க.பாடசாலைக்கு அருகாமை யில் வீதியை குறுக்கறுத்துப் பாயும் கழிவு நீர் ஆற்றினால் இப்பகுதி மக்களும், பாட சாலை மாணவர்களும் பெரும் சிரமத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

இது தொடர்பாக உழவனூர் தம்பிராசபுரம் சனசமூக நிலையத்தினர் வடக்கு மாகாண ஆளுநருக்கு அறிவித்துள்ளனர்.

எனவே இவ்விடயம் தொடர்பாக சம்பந் தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து வீதியில் பாலம் ஒன்று அமைக்க வேண்டும் எனக் கோரி நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கையொப் பமிட்டு மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் சி. பெருமாள் தெரிவித் தார். (ச-84)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 02 . 12 . 1934

உதிர்வு 30 . 10 . 2010



அமரர் திரு. கோவிந்தர் ஆறுமுகம் கந்தசாமி

(K.A.KANTHASAMY - J.P. ALL ISLAND - SWORN TRANSLATOR)

கடந்த 30.10.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 29.11.2010 திங்கட் கிழமை காலை 6.00 மணியளவில் தெணியம்மன் கோவில் அந்தி யேட்டி மடத்திலும் சபிண்டீகரண வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் காலை 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வுகளில் கலந்து தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத் திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்


உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

221/2 விநாயக முதலியார் றோட்,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(சி-1690)

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்






## வாக்காளர் பதிவு 2010

### வாக்களிப்பதற்கு பதிவு செய்து விட்டீர்களா?

✓ வடக்கு-கிழக்கு மாகாணங்கள் மற்றும் இடம் பெயர்ந்து புத்தளம் மாவட் டத்தில் வாழும் மக்களுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் 2010 நவம்பர் 30 ஆம் திகதி வரை தொடரும்.

✓ மேலதிகத் தகவல்கள் மற்றும் படிவங்களை பெற்றுக்கொள்ள இன்றே உங்கள் கிராம சேவை அலுவலர் அல்லது மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரை அணுகுங்கள்.

இத் தகவலை உங்களுக்கு வழங்குவோர்:

CPA

minority rights group international

# 24 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

24 ஆம் திகதியில் பிறந்தவர்கள் பெரும்பாலும் இருதரப்பட்ட மனநிலையில்தான் இருப்பார்கள். ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால் என்பதை நிரூபிக்கக் கூடியவர்கள் இவர்களே. எண்ண ஓட்டத்திற்கு ஏற்பவும், சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்பவும் தங்களை மாற்றிக் கொள்ளும் குணம் முதன்மையாக இருக்கும்.

6ஆம் எண் வரிசையில் மிக அற்புதமான செயல்களைச் செய்யும் தன்மையுடைய எண். எனவே இந்த எண்ணின் ஆதிக்கம் பெற்றவர்கள் அதிர்ஷ்டசாலிகளாக இருப்பதைக் காணலாம். எண் ஆதிக்கக் குறை உள்ளவர்கள் மிகக் குறைவான எண்ணிக்கையினரே.

பெயர் எண்ணின் தன்மையைப் பொறுத்து மாறுபட்டுச் செயற்படும் தன்மை கொண்டது. இவர்களின் தொழில் எண்கள் 1, 5 தொழில் உதவி எண்கள் 6, 9.

இவர்களை பணப் பரிவர்த்தனை, வரி வசூல், பொதுஜனத் தொடர்பு சம்பந்தப்பட்ட துறைகளில் அதிகம் காணலாம். இவர்களுக்கு புதுப்புது யோசனைகளும் வழிமுறைகளும் தோன்றிக் கொண்டே இருக்கும்.

பெண்களால் ஏற்றமும் இறக்கமும் காணும் நிலையும் இருந்துகொண்டே இருக்கும். பேச்சில் வசீகரம் இருப்பதால் இவர்களைப் பலருக்கும் பிடிக்கும். பின் அதுவே சமயம் பார்த்து பள்ளத்தில் தள்ளவும் செய்யும்.

இவர்கள் பெரும்பாலும் வீழ்வது பெண்களால்தான். தொழில் எண்களான 1, 5 இன் ஆதிக்கம் நன்றாக இருந்தாலும், தொழில் உதவி எண்களான 6, 9 இன் ஆதிக்கத்தைப் பொறுத்துத்தான் நடைமுறை வாழ்க்கை அமையும். 6,9 ஆம் சுழலும் தன்மை கொண்ட எண்கள் என்பதால், பிறந்த திகதி எண்களில் 2, 4க்குள்ள ஆதிக்கத்திற்கு ஏற்ப நன்மை-தீமை அமையும்.

எதிலும் முன்னெச்சரிக்கையாகச் செயற்பட்டால் நன்மையைப் பெறலாம். பிறந்த திகதி எண்களான 2, 4 தொழில் எண்களான 1, 5இன் ஆதிக்கம் மட்டும் இருந்தால் மனம் மயக்கத்திலே இருக்கும் நிலை உண்டாகும். பிறந்த திகதி ஆதிக்கத்தை விட தொழில்,தொழில் உதவி எண்களின் ஆதிக்கம் நன்றாக இருந்தால், இடையூறுகள் இன்றி சீரான போக்கு இருக்கும். இவர்கள் திங்கட்கிழமை தோறும் குபேரனை வழிபட்டு வந்தால் நன்மைகள் கிடைக்கப் பெறுவார்கள்.

இவர்கள் பெரும்பாலும் கையில் இருப்பு வைத்துக் கொண்டு தொழில் செய்யும் நிலையைப் பெற்றவர்களாக இருப்பார்கள். மனைவி வந்தபின்தான் முன்னேற்றமும் தொழில் விஸ்தரிப்பும் பொருளாதார நிலையும் மேன்மையடையும்.

தொழில் எண்ளான 1, 5இன் ஆதிக்கத்தைவிட, தொழில் உதவி எண்களான 6, 9இன் ஆதிக்கம் மிக அதிகமான நன்மைகளைச் செய்வதால், வளர்ச்சிப் பாதை உயர்வான நிலையில் இருக்கும்.

மனைவி எண்களான 7, 8 இன் நட்பு எண்களாக தொழில் எண்கள் அமைவதால் ஏற்றம் காண்கிறார்கள். மனைவி எண் அமைப்பு சரியாக அமையாவிட்டால் சுமாரான வாழ்க்கையும் பொருளாதாரத் தடையும் இருக்கும்.

இவர்கள் தங்களின் சுயலாபத்திற்காக எதையும் செய்யும் மனநிலையை உடையவர்களாக இருப்பதைக் காணலாம். 33 வயது முதல் 51 வயது வரை மிகச் சிறந்த நிலையைக் கொடுக்கும்.

இந்த எண் திடீர் சுயநலப் போக்கையும் கொடுக்கும். கவனமாகச் செயற்பட்டால் அனைத்திலும் வெற்றி பெறலாம். வெள்ளிக்கிழமைதோறும் சொர்ண ஆகர்ஷண வைரவரை வணங்கி வந்தால் நிலையான செல்வம் பெற்று வாழ லாம்.

இவர்கள் அதிர்ஷ்டம் கதவைத் தட்டும் முன் வெளியில் சென்றவர்களாகவே இருப்பார்கள். இவர்கள் முன்னே செல்லும்போது அதிர்ஷ்டம் பின்னே வரும். அல்லது அதிர்ஷ்டத்தின் பின்னால் இவர்கள் இருப்பார்கள்.

இதை மாற்றி அமைத்தால் இவர்களின் நிலை தெளிவாகத் தெரியும். தொழில் எண்களான 1, 5இன் ஆதிக்கமும் உதவி எண்ணான 6இன் ஆதிக்கமும் குறைவாக இருப்பதால்தான் இந்த நிலை. மனைவி எண் நன்றாக இருப்பதுதான் இவர்களின் ஒரே இலாபம். பெரும்பாலும் இவர்கள் 1, 2, 3 ஆம் எண்களில் பிறந்த பெண்ணைத்தான் மனைவியாகப் பெற்றிருப்பார்கள்.

சரியான அதிர்ஷ்ட திகதியில் நன்மை செய்யும் திகதியில் தொழில் தொடர்பான செயல்களைச் செய்து வந்தால் வெற்றி பெற வாய்ப்புகள் கிடைக்கும். ஆதிக்கம் குறைவாக உள்ள எண் அதிபதிகளுக்கு தகுந்த வழிபாடுகளைச் செய்து மேன்மை அடையலாம்.

செவ்வாய்க்கிழமைதோறும் ஸ்ரீ வள்ளி அம்மனை தினைமாவு வைத்து வழிபாடு செய்து வந்தால் உயர்வடைந்து சுகம் பெறலாம்.

இவர்கள் எண் ஆதிக்கம் மிக அற்புதமாக அமையப் பெற்றவர்களாவார்கள். டெக்னீஷியன்களாவும் பிறரால் முடியாததைச் செய்யும் வல்லமை பெற்றவர்களாகவும் இருப்பதைக் காணலாம்.

தெய்வ நம்பிக்கை மிக ஆழமாக இருக்கும். தொழில் எண் 1, 5 உம், தொழில் உதவி எண்கள் 6, 9 உம் மிக அதிக நன்மைகளைச் செய்யும் தன்மை கொண்டது. இவர்கள் தங்களின் வாழ்நாள் முழுவதும் நன்மையைப் பெறக் கூடியவர்களாக இருப்பார்கள்.

ஆயிரம் இருந்தும் "No peace of mind" என்று சொல்வது போல, மனைவி அல்லது மற்ற பெண்களால் மிக அதிகமாக பாதிக்கப்படக் கூடியவர்களும் இவர்களே.

வாழ்வில் உச்சத்திற்குச் செல்லும் போது சுய ஒழுக்கமும் கட்டுப்பாடும் தெளிவான மனநிலையும் இருந்தால், கலையுலக பிரம்மா என்று போற்றப்படுவார்கள். 42 வயதுக்குமேல் 60 வயது வரை மிக நல்ல யோகத்தை அடையலாம்.

வெள்ளிக்கிழமை தோறும் சொர்ண இலட்சுமியை வழிபாடு செய்து, பார்வைக் குறை உள்ளவர்களுக்கு உதவிகள் செய்துவந்தால் நன்மைகள் கிடைக்கப் பெறலாம்.

பிறந்து திகதி 24, விதி எண் 1ஆக உள்ளவர்களுக்கு வாழ்நாளில் அதிகபட்சமாக 22 வருடங்கள் யோகப் பலன்கள் உண்டாகும். பிறந்த திகதி 24, விதி எண் 2 ஆக உள்ளவர்களுக்கு 20 வயதுக்கு மேல் 11 ஆண்டுகளும்; 36 வயதுக்கு மேல் 9 ஆண்டுகளும் நற்பலன்கள் உண்டாகும்.


பிறந்த திகதி 24, விதி எண் 3ஆக உள்ளவர்களுக்கு இடைவெளிவிட்டு 6 ஆண்டுகள், பிறகு 3 ஆண்டுகள் இடைவெளி விட்டு 6 ஆண்டுகள் என யோகப்பலன்கள் உண்டாகும். பிறந்த திகதி 24, விதி எண் 4ஆக உள்ளவர்களுக்கு மனதிற்கு ஏற்ப தேவை என்றால் கிடைக்கும். தேவையில்லை என்றால் சுமாரான அல்லது மிதமான பலன்கள் தொடர்ந்து கிடைக்கப் பெறுவார்கள்.

பிறந்த திகதி 24, விதி எண் 5 ஆக உள்ளவர்களுக்கும் 24 ஆண்டுகள் நற்பலன்கள் உண்டாகும். பிறந்த திகதி 24, விதி எண் 6ஆக உள்ளவர்களுக்கு 33 ஆண்டுகள் நற்பலன்கள் செய்யும். பிறந்த திகதி 24, விதி எண் 7ஆக உள்ளவர்களுக்கு முதலில் 11 வருடங்களும் கடைசியில் 11 வருடங்களும் நற்பலன்கள் செய்யும். பிறந்த திகதி 24, விதி எண் 8ஆக உள்ளவர்களுக்கு குறைந்தபட்சம் 15, அதிகபட்சமாக 31 ஆண்டுகள் நற்பலன்களைச் செய்யும்.

குறிப்பு :- பிறந்த திகதி எண், விதி எண், தொழில் எண், நன்மை செய்யும் எண் ஆகியவற்றின் ஆதிக்கத்தைப் பொறுத்து தொழில் நிலைகள் மாறுபடும்.

(தொடரும்)

எஸ்.என்.ஹரிஜி







வலிகாமம் வடக்கு பகுதியின் மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்களை மீள் குடியேற்றம் செய்யும் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று கீரிமலை நகுலேஸ்வரம் கோயில் முன்றலில் இடம்பெற்றது. மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஜே/221,222,223 ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 970 குடும்பங்கள் மீளக்குடியமரவுள்ளன.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் மீளக்குடியமரவுள்ள குடும்பத் தலைவர் ஒருவருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உதவிகளை வழங்குவதையும் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கண்ணிவெடி அகற்றலில் ஈடுபட்ட பெண் ஒருவருக்குச் சான்றிழ் வழங்குவதையும் மாவை சேனாதிராசா எம்.பி உரையாற்றுவதனையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்

# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை -2010

# பயிற்சி வினாத்தாள் - விஞ்ஞானம்-I

## பகுதி - I

## 1 மணித்தியாலம்

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

1) வன் கூட்டுத் தசை
(1) பல்கரு கொண்டது (2) கிளைகொண்டது
(3) நாருரு அமைப்புடையது (4) இச்சையின்றி இயங்கும்

2) பூவின் பெண்ணகம் என அழைக்கப்படும் பூவின் பகுதிகள்.
(1) மகரந்தக் கூடு, இழை (2) துணைப்புல்லி, அல்லி
(3) குறி, தம்பம், சூலகம் (4) குழாய்க்கரு, பிறப்பாக்கும் கரு

3) உயிரங்கியின் கலத்தினுள் இரட்டை மென்சவ்வால் சூழப்பட்ட பல முகடுகளைக் கொண்ட புன்னங்கம் காணப்படும். அதன் தொழில்.
(1) கலத்தின் தொழிற்பாட்டை ஆளும் (2) கடத்தல்
(3) சுவாசம் (4) ஒளித்தொகுப்பு

4) முள்ளந்தண்டற்ற விலங்குகளின் கணங்களும் அவற்றுக்கான உதாரணங்களும் கீழே தரப்பட்டுள்ளன. இதில் கணத்திற்குரிய பிழையான உதாரணங்களைக் கொண்டது.
(1) சீலெந்திரேற்றா-ஐதரா, கடல் அனிமனி (2) அனலிடா-நத்தை, ஆமை
(3) மொலஸ்கா-கணவாய், நத்தை (4)ஆத்திரப்போடா-மரஅட்டை, இறால்

5) கீழே தரப்பட்டுள்ள இரைப்பை தொடர்பான கூற்றுகளுள் பிழையானது.
(1) இது பெப்சின் என்னும் நொதியத்தைச் சுரக்கும்.
(2) அங்குள்ள உணவு அமில ஊடகத்தில் காணப்படுகிறது.
(3) இதயத்துக்குரிய முனைவால்வூடாக இரைப்பையில் இருந்து முன்சிறுகுடலுக்கு உணவு கடத்தப்படும்.
(4) புரதச் சமிபாடு இரைப்பையில் ஆரம்பமாகும்.

6) சூழல் தொகுதியினுள் பதார்த்தங்களின் சுழற்சி செயன்முறையில் நேரடியாக பங்களிப்பு செய்வது
(1) உற்பத்தியாக்கிகள் (2) பிரிகையாக்கிகள்
(3) ஒட்டுண்ணிகள் (4) ஒன்றிய வாழிகள்

7) பச்சைவீட்டு விளைவு தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் சரியானவை
A - வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டு அதிகரித்தல்
B - அதிகளவில் காடுகளை அழித்தல்
C - வளிமண்டலத்தில் ஓசோன் வாயு குறைதல்
D - அனல் மின் நிலையங்களில் நிலக்கரி பாவித்தல்
(1) A, B, D சரியானவை (2) A, B, C சரியானவை
(3) B, C, D சரியானவை (4) A, C, Dசரியானவை

8) பசுவின் உடலில் காணப்படும் உண்ணிகளை மைனா உணவாக எடுக்கப் படுவதை சரியாக விளக்கும் உணவுடன் தொடர்பான இடைத் தொடர்பு
(1) ஓரட்டிலுண்ணல் (2) ஒன்றிய வாழிகள்
(3) இரை கௌவல் (4) ஒட்டுண்ணி ஈட்டம்

9) கீழே இடது புறமாக தரப்பட்டுள்ள ஓமோன்களின் தொழில்களை வலது புறமாக ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளன.


| | |
|---|---|
| 1) அதிரினலின் | A - உடலில் அனுசேப தொழிற்பாட்டை ஆளும் |
| 2) தைரொக்சின் | B - அவசர நிலமைகளின் போது உடலை ஒழுங்கமைக்கும் |
| 3) ஈஸ்திரஜன் | C - உடலின் குளுக்கோஸ் மட்டத்தை மாறாது பேணும் |
| 4) இன்சுலின் | D - துணைப்பாலியல்புகளைத் தோற்றுவிக்கும் |

மேலே தரப்பட்டுள்ள ஓமோன்களின் தொழில்களை சரியான முறையில் ஒழுங்கு படுத்தினால் A, B, C, D அமையும் ஒழுங்குமுறை.
(1) A, C, B, D (2) A, B, C, D (3) B, D, A, C (4) B, A, D, C

10) மனிதனின் ஈரலின் நடைபெறாத தொழில் அல்லாதது
(1) பித்தத்தைச் சுரக்கும் (2) யூரியாவைத் தோற்றுவிக்கும்
(3) செங்குழியங்களை உற்பத்திசெய்யும் (4) கிளைக்கோஜனை சேமிக்கும்

11) பரிவு நரம்புத் தொகுதி மூலம் கணத்தாக்கங்கள் எடுத்துச் செல்லப்படும் போது.
(1) சிறுநீர்ப்பை சுருங்கும் (2) இரைப்பை சுருங்கும்
(3) கதிராளி விரியும் (4) நாடி விரியும்


12) படத்தில் தரப்பட்டுள்ள நுண்ணங்கிகளின் பெயர்களை சரியான ஒழுங்கு முறையில் தரப்பட்ட விடை



(1) கிளிமிடோமோனஸ், யூக்கிலினா, அமீபா, பரமீசியம்
(2) யூக்கிலினா, அமீபா, கிளிமிடோமோனஸ், பரமீசியம்
(3) யூக்கிலினா, பரமீசியம், கிளிமிடோமோனஸ், அமீபா
(4) பரமீசியம், அமீபா, யூக்கிலினா, கிளிமிடோமோனஸ்


13) 8g மெதேன் வாயுவில் உள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கை (H=1, C=12, அவகாதரோ மாறிலி = $6.022 \times 10^{23} mol^{-1}$)
(1) $\frac{6.022 \times 10^{23}}{8 \times 16}$ (2) $\frac{16}{8} \times 6.022 \times 10^{23}$
(3) $\frac{8}{16} \times 6.022 \times 10^{23}$ (4) $8 \times 16 \times 6.022 \times 10^{23}$

14) அமோனியா மூலக்கூறில் இலத்திரன்கள் அமைந்துள்ள முறையைக் குற்று புள்ளி மூலம் காட்டப்பட்டுள்ளது. இதில் இருந்து கூறக்கூடிய முடிவுகளுள் சரியானது.



(1) N, H அணுக்களுக்கிடையில் மும்மைப் பிணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
(2) N அணுவைச் சூழ்ந்து மூன்று தனிச் சோடி இலத்திரன்கள் காணப்படுகின்றன.
(3) N அணுவைச் சுற்றி நான்கு பிணைப்புகள் காணப்படுகின்றன.
(4) N, H அணுக்கள் விழுமிய வாயுவின் இலத்திரன் நிலையமைப்பை பெற்றுள்ளன.

15) தூய்மையாக்கப்பட்ட இரும்பு ஆணி ஒன்றை செப்புத்தகட்டுடன் படத்தில் காட்டியவாறு ஏகார் ஊடகத்தினுள் வைக்கப்பட்டுள்ளது.





இப்பரிசோதனை முடிவில் மாணவனொருவன் வழங்கிய மூன்று கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன
A- இரும்பாணிக்கு அருகில் நீல நிறமும் செப்புத்தகட்டைச் சூழ இளம் சிவப்பு நிறமும் காணப்படும்.
B- இரும்பாணியில் தாழ்தல் தாக்கமும் செப்புத்தகட்டில் ஒட்சியேற்றத் தாக்கமும் நடைபெறும்.
C- செப்புத்தகட்டிற்குப்பதிலாக நாகத்தகட்டைப் பயன்படுத்தினால் இரும்பாணியைச் சூழ இளம் சிவப்பு நிறம் தோன்றும்.
இவற்றில் உண்மையான கூற்று
(1) A,B மட்டும் (2) B,C மட்டும் (3) A,C மட்டும் (4)எல்லாம் சரியானவை

16) இரசாயனத் தாக்கத்தின் போது நிகழும் வெப்பமாற்றத்தினை கருத்திற் கொள்ளும் போது கவனிக்க வேண்டிய அடிப்படையான விடயம்.
(1) தாக்கிகள் ஒன்றுடனொன்று சேரும் வகையில் கலவையை கலக்குதல் வேண்டும்.
(2) தாக்கிகளினதும், விளைவுகளினதும் பௌதீக நிலையை கூறுதல் வேண்டும்.
(3) வெப்பக் காவலிப் பாத்திரத்தில் இரசாயன தாக்கத்தை நடாத்துதல்.
(4) தாக்கிகளினதும், விளைவுகளினதும் சக்தியை அளந்து கொள்ள வேண்டும்.

17) Mg, HCl அமிலத்துடன் நடைபெறும் இரசாயன தாக்கத்தில் தாக்க வேகத்தின் மீது HCl அமிலத்தின் செறிவின் செல்வாக்கை கண்டறிவதற்குப் பொருத்தமற்ற முறை.
(1) ஓரலகு நேரத்தில் வெளியேறும் $H_2$ கனவளவு
(2) $H_2$ வாயுவின் ஓரலகுக் கனவளவு வெளியேற எடுக்கும் நேரம்.
(3) $H_2$ வெளியேற ஆரம்பிப்பதற்கு எடுக்கும் நேரம்.
(4) $H_2$ வாயு முழுவதும் வெளியேற எடுக்கும் நேரம்


18) ஒரு பிரதேசமொன்றில் காணப்பட்ட பாறையொன்று குறுகிய காலத்தில் அழிவுக்குள்ளாகியது. அதற்கான காரணங்கள்
A - காபனீரொட்சைட்டு கரைந்த நீர் பாறையின் மேல் விழுதல்.
B - இலைக்கண் போன்ற நுண்ணங்கிகள் பாறையின் மீது வளர்தல்.
C - சூரிய வெப்பத்தினால் நன்றாக சூடாகி இரவில் பாறை குளிர்ச்சியடைதல்.
D - பெரிய காற்றினால் மணல் அடித்து வரப்படுதல்.
இவற்றில் இரசாயனவானியல்ாலழிதலால் பாறைகள் அழியும் முறை
(1) A, B மூலம் (2) A,C மூலம் (3) C,D மூலம் (4) B,D மூலம்

19) சோடியம் குளோரைட்டின் கரைதிறனைக் கண்டறிய செய்யப்பட்ட பரிசோதனையின் மாதிரி அமைப்பு படத்தில் காட்டப்பட்டுள்ளது. சோடியம் குளோரைட்டின் கரைதிறனின் மீது செல்வாக்குச் செலுத்தும் எக்காரணியைக் கண்டறிய இப்பரிசோதனை நடாத்தப்பட்டுள்ளது.




(10ஆம் பக்கம் பார்க்க)

# வங்கிக் கடனும் வாழ்க்கைத்தரமும் 2



வங்கிக் கடன் பெறும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்.

வங்கி நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்குகையில் பெரும்பாலும் கவனத்திற் கொள்வது வாடிக்கையாளர்கள் வங்கியில் வைப்புச் செய்யும் பணத்தையே ஆகும். வாடிக்கையாளர்கள் வைப்புச் செய்த பணத்தை அவர்கள் கோரும் போது திருப்பிக் கொடுப்பதற்கு வங்கி கட்டுப்பட்டுள்ளது. எனவே வைப்புக்களாக சேகரித்துக் கொள்ளும் பணத்தைவிட கடன் வழங்குகையில் வங்கி கூடுதல் கவனம் செலுத்தும்.

தாம் வழங்குகின்ற கடனை கடன் பெற்றவர் திருப்பி செலுத்துவாரென வங்கி உத்தியோகத்தரை நம்பவைப்பதற்கு இரண்டு முக்கிய விடயங்கள் பிரதானமாக உள்ளன.

➢ வாடிக்கையாளனின் வைப்புக்கள் மற்றும் அவரது வங்கிக் கொடுக்கல் - வாங்கல்கள் மூலம் உறுதிப்படுத்தப்படும் நம்பிக்கை.

➢ ஆரம்பிப்பதற்கு/விருத்தி செய்வதற்கு உத்தேசிக்கின்ற செயற்றிட்டத்தை இலாபகரமாக நடத்தலாமெனவும் அதனின்றும் ஈட்டப்படும் வருமானத்தைக் கொண்டு கடன் தொகையையும் வட்டியையும் செலுத்தலாமென்பதையும் உறுதிப்படுத்தக் கூடியதாக இருத்தல்.

**வாடிக்கையாளரது வைப்புக்களையும் அவர்களது வங்கிக் கொடுக்கல் வாங்கல்களையும் கொண்டு வங்கியாளரின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவது எவ்வாறு?**

➢ வங்கிக் கணக்கொன்றை வைத்திருந்து தம்மால் சேமிக்கக்கூடிய பணத்தை வைப்புச் செய்து தமது கணக்குகளை செயற்படுத்தும் நிலைமையில் வைத்திருத்தல். (கடனொன்றைப் பெறும் நோக்கில் கணக்கை ஆரம்பிக்கும் வாடிக்கையாளர் தொடர்பில் வங்கிக்கு உறுதியான நம்பிக்கை இல்லை)

➢ தனது வருமான ஈட்டல் முறைகளுக்கமைய நிலையான வருமானமுடையவர் என்பதை உறுதிப்படுத்தக் கூடியவராக இருத்தல்.

➢ தனது வியாபார நடவடிக்கைகளுக்கு மிகச்சிறிய அளவிலான கடனைப் பெற்று அவற்றை முறையே வியாபாரங்களில் ஈடுபடுத்தி உழைக்கும் வருமானத்திலிருந்து ஒழுங்காக கடனைத் திருப்பிச் செலுத்துவதன் மூலம் மேலும் வங்கியின் நம்பிக்கையைப் பெறுதல்.

➢ பெற்ற கடனை திருப்பிச் செலுத்த தாமதித்தல், திருப்பிச் செலுத்தத் தவறுதல் அல்லது திருப்பிச் செலுத்தத் தவறிய கடனொன்றுக்கு உத்தரவாதியாக இருத்தல் ஆகியவற்றின் மூலம் வங்கியின் நம்பிக்கையை இழக்காத நபரொருவராதல்.

**கடன் பெற்று ஆரம்பிக்க/முன்னேற்ற உத்தேசித்திருக்கும் வியாபாரத்தைப் பற்றி நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்வது எவ்வாறு?**

➢ புதிதாக ஆரம்பிக்கும் வியாபாரமொன்றாயின், அதன் நடவடிக்கைகளை ஒழுங்காக திட்டமிடுவதோடு, வியாபாரத்தை எவ்வித தடங்கலுமின்றி நடாத்தலாமென உறுதிப்படுத்த வேண்டும்.

➢ உத்தேச வியாபாரத்தை வெற்றிகரமாக நடாத்தக்கூடிய அறிவு, அனுபவம், முகாமைத்துவத்திறமை உமக்கு உண்டு என்பதை புரிய வைக்க வேண்டும்.

➢ வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு நன்கு ஆயத்தமாக உள்ளீரென்பதையும் தெரியப்படுத்த வேண்டும்.

➢ சிறிய அளவில் நடாத்தப்படும் வியாபாரமொன்றாயின் அதன் உற்பத்தி நடவடிக்கைகள், சந்தைப்படுத்தல் வருமானம், உற்பத்தி செலவு, இலாபகரத்தன்மை ஆகிய தகவல்களை பதிந்து வைப்பதன் மூலம் கடன் வழங்குவதற்கு வங்கியை உடன்படச் செய்யலாம்.

➢ சிறிய அளவில் ஆரம்பித்த வியாபாரமொன்றின் கொடுக்கல் - வாங்கல்களை வங்கிக் கணக்கு ஊடாக மேற்கொள்வதன் மூலம் சிறந்த வங்கிப் பழக்கமுடையவர் என்பதை உறுதிப்படுத்த உதவலாம்.

➢ கடன் தொகையின் பொருட்டு தன்னால் வழங்கக்கூடிய பிணையைப்பற்றி வங்கி முகாமையாளருக்கு அறிவிக்க வேண்டும். வங்கியால் ஏற்றுக்கொள்ளக்கூடிய பிணை/உத்தரவாதத்தை சமர்ப்பிப்பதற்கு இருக்கும் ஊக்கத்தை காட்ட வேண்டும்.

வங்கியின் இத் தேவைகளை சாதாரண ஒருவர் தன்னளவில் நிறைவு செய்து கொண்டு மேலே குறிப்பிட்ட ஏதாவது ஒரு வங்கிக் கிளையுடன் தொடர்பு கொண்டு உரிய முறையில் கடனைப் பெற்று படிப்படியாக வியாபாரத்தை

**பி.கிருஷ்ணானந்தன்**
முகாமையாளர்,
மக்கள் வங்கி,
வல்வெட்டித்துறை.

பெருக்கி வாழ்க்கையை உயர்நிலைக்கு கொண்டு செல்லலாம்.

மேலும் விபரங்கள் தேவைப்படின் இவ் வங்கிக் கிளைகளைவிட இலங்கை மத்திய வங்கி அல்லது அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு உரிய பலாபலன்களை அனுபவிக்கலாம். (முற்றும்)

# அரசு-கூட்டமைப்பு உறவு பலமடைந்து வருகின்றது

## சம்பந்தனுக்கு முன்வரிசை ஆசனங்கள்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சிக்கும் இடையிலான உறவு அண்மைக்காலமாக அதிகரித்துச் செல்வதாக லங் காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அண்மைக்காலமாக அடிக்கடி ஜனாதிபதியை பகிரங்கமாக சந்தித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிற்கு அண்மையில் ஜனாதிபதி வழங்கிய இரவுப் போசனத்திற்கும் சம்பந்தனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாகவும் சம்பந்தனுக்கு முன்வரிசை ஆசனமொன்று ஒதுக்கப்பட்டிருந்ததாகவும் அதில் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதியின் தந்தை டி.ஏ.ராஜபக்ஷ நினைவுப் பேருரை நிகழ்வுகளிலும் சம்பந்தனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாகவும் அதிலும் முன்வரிசை ஆசனம் ஒன்று ஒதுக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெறவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

வடக்கு- கிழக்கு அபிவிருத்திப் பணிகளின் போது அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தேசித்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (ச-5-2)

# ஐ.தே.க.பொதுச்சபை கூட்டத்தை நிறுத்த ரணில் சூழ்ச்சித்திட்டம்



ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தை நடத்தாமல் தடுப்பதற்கு கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க சூழ்ச்சித் திட்டமொன்றை தீட்டி வருவதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த இரகசிய சூழ்ச்சித் திட்டத்திற்கு எதிராக அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தலைமையிலான இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி பொதுச்சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கட்சியின் தலைவர் உள்ளிட்ட முக்கிய பதவிகளில் மாற்றம் ஏற்படுத்தப்படலாம் என எதிர்வு கூறப்பட்டிருந்தது.

பொதுச் சபைக் கூட்டத்தை நடாத்துவதற்கு அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைப்பு காட்டி வருவதாக குறித்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை கட்சியின் இளம் தலைமுறையினருக்கு கட்சித் தலைமை உரிய சந்தர்ப்பம் வழங்குவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுஜீவ சேனசிங்க மற்றும் புத்திக்க பத்திரன ஆகியோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற கட்சிக் கூட்டமொன்றில் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை இருவரும் கடுமையாக சாடியுள்ளனர்.

ரணில் விக்ரமசிங்க வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாகவும் பொய்யான கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளனர். (5-2)

# கடற்படையினர் அமைத்த வீடுகள் உரிய மக்களிடம் கையளிப்பு

காரைநகர் பகுதியில் கடற்படையினரால் பத்து வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட 3 ஆவது, 4 ஆவது வீடுளும் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு வடபிராந்திய கட்டளைத் தளபதி கெமதூறு ரி. ஜெ.எஸ். சின்னையா தலைமையில் நடைபெற்றது. இதில் காரைநகர் எலாரா முகாம் கட்டளைத் தளபதி ஏ.யூ.சி.த.சில்வா, கடற்படையினர், கடற்படை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு வீடுகளைத் திறந்து வைத்தனர்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து இரண்டு குழந்தைகளுடன் வசித்து வரும் விதவையான செல்வராசா மல்லிகா மற்றும் மாப்பானவூரில் வசித்து வரும் சின்னத்தம்பி சண்முகராசா ஆகியோரிடம் வைபவ ரீதியாக வீட்டுக்கான திறப்புக்களைக் கையளித்தனர்.

இந்நிகழ்வில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் , வங்கி முகாமையாளர்கள், பாடசாலை அதிபர்கள்,வைத்திய அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (2)

# தூத்துக்குடிக்கிடையில் விரைவில் கப்பல் சேவை

தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடர்ங்குவது குறித்து மத்திய அமைச்சரவை கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு அறிவிக்கப்படும் என இந்திய மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிலவும் அமைதியான சூழ்நிலையை தொடர்ந்து தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆரம்பிப்பதற்கான பேச்சுவார்த்தைகளை இந்தியா மற்றும் இலங்கை அரசாங்கங்கள் மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச-5-2)

# ஐரோப்பிய திரைப்பட விழா

ஐரோப்பிய திரைப்பட விழா யாழ்ப்பாணம் திருமறைக்கலாமன்றம் கலைத்தூது கலையகத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இத்திரைப்படக் காட்சிகள் மதியம் ஒரு மணிக்கும் பிற்பகல் 3 மணிக்கும் காண்பிக்கப்படவுள்ளன.

மேற்படி திரைப்பட விழா கடந்த மாதம் காலியிலும் கண்டியிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இத்திரைப்படக் காட்சியில் 10 மேலைத்தேய திரைப்படங்கள் காண்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-51)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்.மாவட்டத்தில் சிரேஷ்ட பிரிவுகளில் இரண்டாம் மொழியாக சிங்கள பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் டிசம்பர் மாதம் 8,9 மற்றும் 10 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப3.30 மணி வரை நடைபெற வுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்கள் தங்கள் பெயர் விபரங்களை தமது பாடசாலை அதிபர் ஊடாக தத்தம் வலய கல்வி அபிவிருத்திப் பிரிவுக்கு அறிவிக்குமாறு வடமாகாண மேலதிகமாகாண கல்விப்பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (எ-19)

# கொரியாவுக்குள் நுழைந்தால் என்ன நடக்குமென கூறமுடியாது

## அமெரிக்காவுக்கு வடகொரியா எச்சரிக்கை

சியோல்

தென்கொரியா தனது மக்களை போர்க் கேடயமாக பயன்படுத்துவதாகக் குற்றம் சாட்டியுள்ள வடகொரியா, அமெரிக்காவின் ஜார்ஜ் வோஷிங்டன், கொரியாவின் மஞ்சள் கடல் எல்லைக்குள் வந்தால் அதன்பின் என்ன நடக்கும் என்று யாராலும் கணிக்க முடியாது என்று புதிய மிரட்டல் விடுத்துள்ளது. வடகொரியா அடுத்தடுத்து விடுத்துவரும் எச்சரிக்கைகளால் தென்கொரிய மக்களிடையே மேலும் மேலும் கோபம் அதிகரித்து வருகிறது.

சமீபத்தில் தென்கொரியாவுக்கு சொந்தமான இயான்பியாங் தீவு மீது வடகொரியா நடத்திய தாக்குதலில் தென்கொரிய கடற்படைவீரர்கள் இருவர் 60 வயதுள்ள இரண்டு பேர் என நான்கு பேர் பலியாகினர். இச்சம்பவம் உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியது. நேற்று முதல் தென்கொரிய தலைநகர் சியோல் அருகில் உள்ள சியோன்க்னம் நகரின் இராணுவ மருத்துவமனையில் பலியான இரு கடற்படை வீரர்களுக்கான இறுதி அஞ்சலி நிகழ்ச்சி நடந்தது. இதில் தென்கொரிய பிரதமர் கிம் ஹவாங் சிக் உட்பட அரசு அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், மதத்தலைவர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய புதிய இராணுவ அமைச்சர் கிம் க்வான் ஜின் கூறுகையில், வடகொரியாவின் இச்செயலுக்கு நாம் இரண்டு மடங்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். அதேநேரம் சியோலில் ஆயிரத்துக்கம் மேற்பட்ட முன்னாள் கடற்படைவீரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வடகொரியாவின் கொடி மற்றும் அதிபர் படங்களை எரித்து தங்கள் கண்டனத்தை தெரிவித்தனர்.

**வடகொரியா புதிய மிரட்டல்**

இந்நிலையில் வடகொரியாவின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தி ஒன்றில் கூறப்பட்டிருப்பதாவது: கொரியாவின் மேற்குக் கடற்பகுதியில் அமெரிக்கா தன் போர்க்கப்பலை கொண்டு வருமானால் அதன் விளைவுகள் என்ன என்று யாராலும் கணிக்க முடியாது.

வடகொரியாவின் தாக்குதலில் இறந்து போன பொதுமக்களை வைத்து தென்கொரியா தீவிரப் பிரசாரம் செய்கிறது. தாக்குதலுக்கு முன் அதிகாலையில் தென்கொரியாவுக்கு தொலைபேசி மூலம் வடகொரியா நோட்டீஸ் விட்டது.

கடைசிநேர மோதலை தவிர்க்க வேண்டுமென்ற நோக்கத்தில் விடுக்கப்பட்ட அந்த நோட்டீசை தென்கொரியா புறக்கணித்து விட்டு மேலும் மேலும் வடகொரியாவைத் தூண்டிவிடும் செயல்களில் ஈடுபட்டு வருகிறது. இவ்வாறு அதில் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

**சீனா முயற்சி**

இவ்விவகாரத்தில் தலையிட்டு அமைதியை ஏற்படுத்தும்படி சீனாவுக்கு பல தரப்பில் இருந்தும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இதையடுத்து சீன வெளியுறவு அமைச்சர் யாங் ஜெய்ச்சி வடகொரியா தூதரை நேரில் சந்தித்துப் பேசினார். தொடர்ந்து அமெரிக்க மற்றும் தென்கொரிய வெளியுறவு அமைச்சர்களுடன் தொலைபேசியில் உரையாடினார்.

இவ்விவகாரத்தில் வடகொரியாவின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்துள்ள அமெரிக்கா இந்த கூட்டு இராணுவப் பயிற்சி வடகொரியத் தாக்குதலுக்கு முன்பே திட்டமிட்டதுதான் என்று கூறியுள்ளது. அமொரிக்காவுடன் தென்கொரியா கூட்டு இராணுவப் பயிற்சி மேற்கொள்ள சில மணி நேரங்களே இருந்த நிலையில் வடகொரியா விடுத்துள்ள இச் செய்தியும் சியோலில் நடந்த கடற்படை வீரர்களின் இறுதியஞ்சலி நிகழ்ச்சியும் தென்கொரியாவில் மேலும் பதற்றத்தை அதிகப்படுத்தியுள்ளது. (எ-5)




## விக்கிலீக் வெளியிடும் இரகசிய ஆவணங்கள்

அமெரிக்க, இங்கிலாந்து இராணுவத்தினர் போர்க் குற்றங்கள் பற்றிய இரகசிய ஆவணங்களை வெளியிட்ட விக்கிலீக் நிறுவனம் மேலும் பல இரகசியங்களை வெளியிட முடிவு செய்திருக்கிறது.


இது முன்பை விட 7 மடங்கு அதிகமாக இருக்கும் என தெரிகிறது. அதில் வெளிநாடுகளில் அமெரிக்கா நடத்திய உளவு வேலைகள் மற்றும் தூதரக ரீதியிலான இராஜதந்திர செயல்கள் போன்ற தகவல்கள் இடம் பெறுகின்றன.

இத்தகைய தகவல்கள் வெளியானால் முன்பு அமெரிக்காவிடம் விலகி இருந்து தற்போது நெருக்கமாக இருக்கும் நாடுகளுடன் அமெரிக்காவின் உறவு பாதிக்கப்படக் கூடும். எனவே அவை வெளியாகும் முன்பே தனது நட்பு நாடுகளை அமெரிக்கா உஷார்படுத்தி வருகிறது.

ஏற்கனவே அவுஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளை எச்சரித்தது. தற்போது இந்தியா, ரஷ்யா, இஸ்ரேல், துருக்கி, ஜெர்மன் போன்ற நாடுகளையும் உஷார்படுத்தியுள்ளது.

இந்தத் தகவலை தெரிவித்த அமெரிக்க வெளியுறவு துறை செய்தி தொடர்பாளர் கிரவுலி விக்கிலீக் வெளியிடும் இரகசிய ஆவணங்கள் குறித்து இந்தியாவிடம் தெரிவித்துள்ளோம். அதில் உள்ளது எமக்குத் தெரியாது. எனினும் அது வெளியிடப்படக் கூடாது என்பதே அமெரிக்காவின் நிலை என்றார்.

இந்நிலையில் அமெரிக்க முப்படை தலைமை தளபதி முல்லர், அபாயகரமான இரகசியங்களை வெளியிடுவதை விக்கிலீக் நிறுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (ச-5-2)



மியன்மார் நாட்டின் எதிர்க்கட்சி தலைவரான ஆங் சான் சூகியை ஐ.நா. விற்கான சிறப்பு தூதர் விஜய் நம்பியார் சந்தித்துப் பேசியுள்ளார். இச்சந்திப்பு ஒரு மணிநேரத்திற்கும் மேல் நீடித்தது. இச் சந்திப்பின்போது மியன்மார் நாட்டில் உள்ள பிரச்சினைகள் குறித்து பேசியதாக ஆங் சான் சூகி தெரிவித்தார். இருப்பினும் தற்போது நடைபெற்ற சந்திப்பு மட்டும் போதாது என்றும் மேலும் இதுபோன்ற சந்திப்புகள் தொடரும் பட்சத்தில் நாட்டில் உள்ள பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படும் எனவும் அவர் கூறினார்.



கொரிய தீபகற்பத்தில் கூட்டுப்போர் ஒத்திகையை அமெரிக்கா, தென்கொரியா ஆரம்பித்தது. தென்கொரியாவின் தெற்கு பகுதியிலிருந்து 125 கி.மீ. தொலைவில் இருந்து இந்த கூட்டுப்போர் ஒத்திகையை இரு நாடுகளும் தொடங்கியிருக்கிறது. இந்த ஒத்திகை நான்கு நாட்கள் நடைபெறவுள்ளது. இச்செயலை வடகொரியா கடுமையாக் கண்டித்துள்ளது.

## பேஸ்புக் இணையத்தளத்துக்கு சவுதி அரேபியாவில் தடைவிதிப்பு

பேஸ்புக் இணையத்தள சேவைக்கு சவுதி அரேபியாவில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இஸ்லாமிய வழி சட்ட திட்டங்களை கடைபிடிக்கும் சவுதி அரேபியா குற்றம் செய்தவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்குவதில் பெயர் பெற்ற நாடாகும். நாட்டின் அரசியல் மற்றும் நிர்வாக முறைகளை நிர்வகிப்பதில் இஸ்லாமிய மதத் தலைவர்கள்தான் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

உலக அளவில் பிரபலமான பேஸ்புக் சமூக இணையத்தளம் சவுதியின் சட்ட திட்டங்களை மீறுவதாக குற்றம் சாட்டப்பட்டு வந்தது. இந்நிலையில் சவுதி தகவல் தொடர்புத்துறை, பேஸ்புக் சமூக இணையத்தளத்தை கடந்த வாரம் தடை செய்தது. இதுகுறித்து சவுதி தகவல் தொடர்பு அமைச்சக ஊழியர் ஒருவர் கூறுகையில்,

நாட்டு மக்கள் கடைபிடித்து வரும் கலாசார பழக்க வழக்கங்களை மீறும் வகையில் பேஸ் புக் இணையத்தள சேவைகள் உள்ளன.

இதனால் அதற்கு தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றார்.


அடுத்த சில நாட்களில் தனது முடிவை மாற்றிக் கொண்ட சவுதித் தகவல் தொடர்பு அமைச்சகம் இந்தத் தடையை நீக்கியுள்ளது. எனினும் தனது சேவை முறைகளில் திருத்தம் செய்யும்படி சவுதி பேஸ்புக் அலுவலகம் வற்புறுத்தப்பட்டுள்ளது.

இதனால் பேஸ்புக் இணையத்தளத்திற்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. சில நாட்களுக்கு முன் தனியார் பிளாக் ஒன்றில் நான்தான் கடவுள் என்று கூறி மோசடி செய்த ஒருவனை பேஸ் புக் உதவியுடன் சவுதி பொலிஸார் கைது செய் தது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே வங்கதேசம் மற்றும் பாகிஸ்தான் நாடுகளும் பேஸ்புக் இணையத்தளத்தை தடை செய்துள்ளன. (ச-2)

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

(1) கரைப்பானின் தன்மை (2) கரைப்பானின் கனவளவு
(3) கரையத்தின் அளவு (4) வெப்பநிலை

20) மாறாத்திணிவு கொண்ட வாயுவொன்றின் கனவ்ளவானது தனி வெப்ப நிலையுடன் மாறும் முறையை கீழே தரப்பட்டுள்ள வரைபு காட்டுகின்றது.




450k வெப்பநிலையில் வாயு கொண்டுள்ள கனவளவு
(1) 325cm³ (2) 350cm³ (3) 375cm³ (4) 400cm³

21) குளிர்த்தியாகப் பயன்படுத்தப்படும் வாயு
(1) $O_2$ (2) $N_2$ (3) $Cl_2$ (4) $N_3$

22) கீழே தரப்பட்டுள்ள கரைப்பான்களில் முனைவுத்தன்மை கொண்ட சேதனக் கரைப்பான்கள் அடங்கிய கூட்டம்
(1) எதனோல், ஹெக்சேன், அசற்றோன்
(2) எதனோல், நீர், ஹெக்சேன்
(3) மெதனோல், அசற்றோன், ஹெக்சேன்
(4) மெதனோல், எதனோல், அசற்றோன்

23) நீரின் தற்காலிக வன்மைக்கு காரணமான உப்பு
(1) NaCl (2) $CaCO_3$ (3) $Na_2CO_3$ (4) $Ca(HCO_3)_2$


24) களிமண்துணிக்கை பற்றி மாணவன் ஒருவன் எழுதிய கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
A - களிமண்ணில் சிலிக்கேற்று அடங்கியுள்ளது
B - களிமண் துணிக்கைகள் கற்றயன்களை தேக்கி வைக்கும்
C - மண்ணில் உள்ள உயிர்ப்பான சேதனக் கூறு
D - களிமண் துணிக்கைகளினால் மண்வளி அதிகளவு சேர்த்துவைக்கப்படுகின்றது.
இவற்றுள் சரியானவை
(1) Aயும், Bயும் (2) Bயும், Cயும் (3) Cயும், Dயும் (4) Aயும், Dயும்

25) பின்வருவனவற்றில் காவிக்கணியம் அடங்கிய சோடி,
(1) கதி, நேரம் (2) விசை, இடப்பெயர்ச்சி
(3) வேகம், தூரம் (4) ஆர்முடுகல், வேலை

26) $a = \frac{v - u}{t}$ என்பது இயக்கவியலுடன் தொடர்பான சமன்பாடாகும். இங்கு a, v, u, t என்ற ஆங்கில எழுத்துக்கள் குறிப்பவை முறையே,
(1) நேரம், ஆரம்பவேகம், இறுதிவேகம், ஆர்முடுகல்
(2) நேரம், இறுதிவேகம், ஆரம்பவேகம், ஆர்முடுகல்
(3) ஆர்முடுகல், இறுதிவேகம், ஆரம்பவேகம், நேரம்
(4) ஆர்முடுகல், ஆரம்பவேகம், இறுதிவேகம், நேரம்

27) மின்னேற்றிகளை சேமித்து வைக்கப் பயன்படும் உபகரணம்
(1) கொள்ளளவி (2) நிலைமாற்றி (3) இருவாயி (4)வலுப்பொதி

28) படத்தில் காட்டப்பட்டுள்ள தடையின் தடைப் பெறுமானம்.
(கறுப்பு-0, கபிலம்-1, மஞ்சள்-4)





(1) 104Ω (2) 401Ω (3) 10000Ω (4) 100000Ω

29) தனி வெப்பநிலையை திருத்தமாக எழுதிக்காட்டப்பட்டிருப்பது.
(1) -273⁰C (2) -273⁰K (3) 0K (4) 0⁰C


30) கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் இருந்து நீங்கள் வரும் பொருத்தமான முடிவு யாது?
A - உறைநிலையைத் துணிவதன் மூலம் பதார்த்தமொன்றின் தூய்மையைப் பரிசோதிக்க முடியும்
B - உறைநிலை மறைப்பெறுமானத்தைக் கொண்டுள்ள பதார்த்தங்களின் உறைநிலையைத் துணிய மதுசாரவெப்பமானி பயன்படுத்தப்படும்.
(1) இரண்டு கூற்றுகளும் உண்மையானவை, A யின் மூலம் B விளக்கப் படுகிறது.
(2) இரண்டு கூற்றுகளும் உண்மையானவை, A யின் மூலம் B விளக்கப்படவில்லை.
(3) கூற்று A மட்டும் உண்மையானது.
(4) கூற்று B மட்டும் உண்மையானது.

31) கீழே தரப்பட்டுள்ள A, B வரிப்படங்கள் பற்றிய உண்மையான கூற்று,





(1) Bயில் காட்டப்பட்டுள்ள pnp திரான்சிஸ்டரின் குறியீடு A இல் காட்டப்பட்டுள்ளது.
(2) Bயில் காட்டப்பட்டுள்ள npn திரான்சிஸ்டரின் குறியீடு A இல் காட்டப்பட்டுள்ளது.
(3) A, B க்கு இடையில் தொடர்பற்றதாயினும் A-pnp திரான்சிஸ்டராகும்.
(4) A, B க்கு இடையில் தொடர்பற்றதாயினும் A-npn திரான்சிஸ்டராகும்.

32) மெழுகுதிரி எரியும் போது மாத்திரம் இக் கடதாசிச் சுருள் சுழலும். இத்தோற்றப்பாட்டை விளக்கும் பொருத்தமான கூற்று.




(1) மெழுகுதிரிச் சுவாலையினால் சுருள் வெப்பமாக்கப்படும்.
(2) மெழுகுதிரிச் சுவாலையினால் மேற்காவுகை மூலம் சூழவுள்ள வளி சூடாகும்.
(3) மெழுகுதிரிச் சுவாலையினால் மேற்காவுகை ஓட்டம் ஏற்படுகிறது.
(4) மெழுகுதிரிச் சுவாலையினால் கதிர்வீசல் மூலம் வெப்பம் வெளியிடப்படும்.

33) படத்தில் காட்டியவாறு முதலச்சுக்குச் சமாந்தரமாக வரும் ஒளிக்கதிரானது வில்லையில் முறிவடைந்து குவியும் இடம்.




(1) $F_1$இல் குவியும் (2) $F_2$இல் குவியும்
(3) $F_1$இல் இருந்து விரியும் (4) $F_2$இல் விரியும்

34) கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளைக் கொண்டு பொருத்தமான முடிவை தெரிவு செய்க.
A - வாயு நிரலின் நீளத்திற்கு ஏற்ப மீடிறன் மாறுபடும்.
B - வெவ்வேறு மட்டங்களில் நிரப்பப்பட்ட பாத்திரங்களை மெதுவாகத் தட்டுவதன் மூலம் வெவ்வேறு சுரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.
(1) இரண்டு கூற்றுகளும் உண்மையானவை B யின் மூலம் A விளக்கப்படுகிறது.
(2) இரண்டு கூற்றுகளும் உண்மையானவை B யின் மூலம் A விளக்கப்படவில்லை.
(3) A கூற்று உண்மையானது.
(4) B கூற்று உண்மையானது.

35) நிமிர்ந்த பெரிய மாயவிம்பத்தைப் பெறுவதற்கு குழிவாடியில் பொருள் அமைய வேண்டிய இடம்.
(1) ஆடிக்கு அண்மையில் பொருள் இருக்க வேண்டும்.
(2) ஆடிக்கு சேய்மையில் பொருள் இருக்க வேண்டும்.
(3) ஆடியின் குவியத்தில் பொருள் இருக்க வேண்டும்.
(4) ஆடிக்கும் குவியத்திற்கும் இடையில் இருக்க வேண்டும்.

36) ஓமின் விதியை வாய்ப்புப் பார்க்க செய்யப்பட்ட பரிசோதனையின் முடிவுகள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அவற்றில் சில வாசிப்புக்கள் தெளிவற்று காணப்படுகின்றன. அவ்விடங்களுக்கு வரவேண்டிய வாசிப்புக்கள்.

| அழுத்த வித்தியாசம் (V) | 1.0 | 2.0 | 3.0 | 4.0 | 5.0 | 6.0 |
|---|---|---|---|---|---|---|
| மின்னோட்டம் (mA) | 15 | 30 | ...... | ...... | 75 | 90 |

(1) 40, 45 (2) 40, 55 (3) 45, 60 (4) 45, 55

37) ஒரே வகையான நுளம்பினால் பரப்பப்படும் இரண்டு நோய்கள்.
(1) டெங்கு, யானைக்கால் (2) டெங்கு, மலேரியா
(3) டெங்கு, சிக்கன்குனியா (4) டெங்கு, ஜப்பானிய மூளைக்காய்ச்சல்

38) பச்சைவீட்டு விளைவு பற்றிய பொருத்தமற்ற கூற்று.
(1) காபனீரொட்சைட்டும், நீரும் காரணமாக அமைகிறது
(2) அது குறிப்பிட்ட அளவில் இருப்பது அவசியமாகும்
(3) இது புவியை வெப்பமடையச் செய்யும்.
(4) பச்சை வீட்டினுள் பயிர்களை வளர்ப்பதை நிறுத்துவதன் மூலம் இவ்விளைவை தடுக்கலாம்.

39) கனிய எண்ணைக்குப் பதிலாக பயன்படுத்தப்படும் உயிர் டீசலை பெறுவதற்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள்
(1) வேலி ஆமணக்கு வித்து (2) எண்ணெய் ஆமணக்கு வித்து
(3) சோள வித்து (4) இறப்பர் வித்து

40) இலங்கையில் பிள்ளைகளின் உடல், உளவளர்ச்சி பாதிக்கப்படுவதற்கான முக்கிய காரணம் உணவில் அயடீன் குறைவாகக் காணப்படுவதே. இவ் அயடீன் உடலில் உள்ள கானில் சுரப்பியைத் தூண்டுவதனால் பெறப்படும் ஓமோன்.
(1) அதிரினலீன் (2) தைரொக்சின்
(3) இன்சுலின் (4) ஈஸ்திரஜன்

# தமிழருக்கு அரசியல் வாய்ப்பை வழங்க சிங்கள மக்களுக்கு பொறுமை தேவை

## பாக்.புலனாய்வு எழுத்தாளர் கருத்து

(கொழும்பு)

இலங்கையில் தமிழ் மக்களுக்கு அரசியல் வாய்ப்புக்களை வழங்குவதில் சிங்கள மக்கள் பொறுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும் செயற்பட வேண்டும் என பாகிஸ்தானின் பிரபல புலனாய்வு எழுத்தாளரான டாக்டர் ஆயிஷா சித்தீகா தெரிவித்தார். சிறீலங்கா கார்டியன் இதழுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் வழங்கிய பிரத்தியேக பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது,

இலங்கையில் சிறுபான்மை தமிழ் மக்களுக்கு அரசியல் வாய்ப்புக்களை வழங்குவதில் பெரும்பான்மை இன சிங்கள மக்கள் பொறுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும் செயற்பட வேண்டும்.

2006 ஆம் ஆண்டிற்குப்பின் நான் இலங்கைக்கு வருகை தரவில்லை. ஊடகங்களின் ஊடாக பார்க்கும் ஒருவருக்கு யுத்தத்தில் பெற்றது வெற்றியின் அரைப்பங்காகவே தெரியும்.

சமூக அரசியல் தணிவுக்காக ஒரு வேலைத்திட்டம் வேண்டும் உண்மைக்கும் சமாதானத்துக்குமான சுயா தீனமான சலுகைகள் இல்லாவிடின் விடயங் களில் முன்னகர்வு ஏற்படுவது சாத்தியமில்லை.

போரின்போது பாகிஸ்தான் இலங்கைக்கு கணிசமானளவு உதவி செய்தமை, புலிகளுக்கு எதிரான விமானத் தாக்குதல்களின் போது பாகிஸ்தானிய விமானப்படை வீரர்கள் பங்கேற்றதாகத் தெரிவிக்கப்பட்டமை போன்ற விடயங்கள் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த அவர் பாகிஸ்தான் இலங்கைக்கு மூன்று நோக்கங்களின் அடிப்படையில் உதவி செய்தது. முதலாவது தெற்காசிய நாடுகளின் அரசியலில் செல்வாக்குச் செலுத்துவதன் மூலமாக இந்தியாவுடன் சமபலத்தைப் பேணுவதான தோற்றத்தை உருவாக்குதல், பிராந்தியத்தில் அச்சமூட்டத்தக்க செல்வாக்கை வளர்த்தெடுப்பது, இந்திய புலனாய்வுத் துறையினால் உருவாக்கப்பட்ட தமிழ்ப் போராளிகளை அழித்தல் போன்றனவே அக் காரணங்களாகும்.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுதங்களை சந்தைப்படுத்துவதும் துணை நோக் கங்களில் ஒன்றாகக் கருதலாம். தமிழர்கள் மற்றும் சிங்களவர்கள் மீது சமாதான பேச்சுவார்த்தைகளுக்கான அழுத்தத்தைப் பிரயோகித்திருப்பின் அது சிறந்த பாத்திரமாக அமைந்திருக்கும்.

சோகமான விடயம் என்னவென்றால் கொழும்பு இஸ்லாமாபாத்துடன் நல்லுறவுகளை பேணிவந்த போதும் தமிழர்கள் பாகிஸ்தானை ஒரு குற்றவாளியாகக் கருதி வந்தனர் எனத் தெரிவித்தார்.

(ச-5,2)

## ஆளும் கட்சி எம்.பிக்களுக்கு பிராடோ ரக சொகுசு வாகனம்

(கொழும்பு)

அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படாத ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிராடோ ரக சொகுசு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பின் வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களை திருப்திப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிராடோ ரக சொகுசு வாகனமொன்றின் சந்தை விலை இரண்டு கோடி ரூபா எனவும் அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படாத 50 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இவ்வாறு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதிருப்தியடைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை திருப்திப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (5-2)

## தொண்டு நிறுவனங்களுக்கு தடைவிதிக்க வேண்டும்

### எழுத்தாளர் சுசந்த ஆலோசனை

(கொழும்பு)

நாட்டில் இயங்கி வரும் சில வகை தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு தடை விதிக்கப்பட வேண்டுமென பிரபல எழுத்தாளரும், கல்வியியலாளருமான டாக்டர் சுசந்த குணதிலக்க தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவிடம் எழுத்துமூலமான சாட்சியங்களை அளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜெஹான் பெரேரா தலைமையிலான தேசிய சமாதானப் பேரவை மற்றும் டாக்டர் பாக்கியசோதி சரவணமுத்துவின் தலைமையில் இயங்கி வரும் மாற்றுக்கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் போன்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு தடை விதிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்த நிறுத்த காலத்தில் நாட்டுக்கு எதிராக செயற்பட்டவர்களின் பொது உரிமை பறிக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில வகை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நாட்டின் இறைமைக்கு குந்தகம் ஏற்படும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் இவ்வாறு நாட்டுக்கு எதிராக செயற்பட்ட சிலர் தற்போது தங்களை சுத்தப்படுத்திக் கொள்ள உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்து வருகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். (ச-5-2)

## "ஒரு நாடு - இரு தேசங்கள்" இதுதான் இன்றைய இலங்கை

### த எக்கெனமிக்ஸ் சஞ்சிகை கூறுகிறது

இலங்கையின் நிலையை ஒரு நாடு -இரு தேசங்கள் என்கிற தலையங்கத்தில் ஆராய்ந்து பத்தி ஒன்றை லண்டனிலிருந்து வெளியாகும் த எக்கெனமிக்ஸ் சஞ்சிகை , பிரசுரித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றிக்கு உரிமை கொண்டாடி வந்தாலும் கூட இலங்கை இன்னமும் இரண்டாகப் பிளவுபட்டுத்தான் உள்ளது என்று இப் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நல்லிணக்கம் பேச்சளவில்தான் பெரிதாகக் காணப்படுகிறது என்றும் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பு, யாழ். நாவற்குழியில் சிங்களவர்கள் குடியேற்றம், தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகள், அதியுயர் பாதுகாப்பு வலயக் கெடுபிடிகள், அகதி முகாம் வாழ்க்கை ஆகியன உட்பட இலங்கையின் சமகால நடப்புகள் பற்றிய விடயங்கள் இப்பத்தியில் ஆராயப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (எ-5,2)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2010.11 29

- 1781 - கூலிகளை ஏற்றிச்சென்ற சொங் என்ற கப்பல் மாலுமிகள் காப்புறுதிக்காக 133 ஆபிரிக்கர்களை கொன்று கடலுக்குள் எறிந்தனர்.
- 1830 - போலந்தில் ரஷ்யாவின் ஆட்சிக்கெதிராக புரட்சி வெடித்தது.
- 1855 - துருக்கியில் தாதியர் பயிற்சிக்காக புளோரன்ஸ் நைட்டிங்கேல் நிதியம் நிறுவப்பட்டது.
- 1877 - தோமஸ் அல்வா எடிசன் போனோகிராஃப் என்ற ஒலிப்பதிவுக் கருவியைக் முதற்தடவையாகக் காட்சிப்படுத்தினார்.
- 1915 - கலிபோர்னியாவில் சாண்டா கட்டலீனா தீவின் பல முக்கிய கட்டடங்கள் தீயில் எரிந்தன.
- 1922 - ஹவார்ட் கார்ட்டர் பண்டைய எகிப்தின் துட்டன்காமுன் மன்னனின் கல்லறையை பொதுமக்களின் பார்வைக்கு திறந்து விட்டார்.
- 1929 - ஐக்கிய அமெரிக்காவின் ரிச்சார்ட் பயேர்ட்தென் முனை மேல் பறந்த முதல் மனிதரானார்.
- 1945 - யூகொஸ்லாவிய சமஷ்டி மக்கள் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1950 - வட கொரியா மற்றும் சீனப் படைகள் ஐ.நா. படைகளை வட கொரியாவிலிருந்து வெளியேறும்படி செய்தனர்.
- 1961 - நாசாவின் மேர்க்குரி-அட்லஸ் 5 விண்கலம் சிம்பன்சி ஒன்றை ஏற்றிக் கொண்டு விண்ணுக்கு அனுப்பப்பட்டது. இது பூமியை இரு தடவைகள் சுற்றிவந்து புவேர்ட்டோ ரிக்கோவில் இறங்கியது.
- 1963 - 118 பேருடன் சென்ற கனடாவின் விமானம் மொன்ட்ரியாலில் விபத்துக்குள்ளாகியது.
- 1982 - ஐ.நா. பொது அவை சோவியத் படைகளை ஆப்கானிஸ்தானில் இருந்து உடனடியாக விலகும்படி சோவியத் ஒன்றியத்தைக் கேட்டது.
- 1987 - கொரிய விமானம் தாய்-பர்மிய எல்லைக்கருகில் வெடித்துச் சிதறியதில் 155 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - அணுவாயுதங்களை எடுத்துச் சென்று 700 கிமீ தூரம் உள்ள இலக்குகளைத் தாக்கக்கூடிய ஷாகீன் 1 என்ற ஏவுகணை சோதனையை பாகிஸ்தான் வெற்றிகரமாக நடத்தியது.

### பிறப்புகள்


- 1889 - எட்வின் ஹபிள், வானிலையாளர் (இ. 1953)
- 1908 - என்.எஸ்.கிருஷ்ணன், தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகர் (இ. 1957)

### இறப்புகள்

- 1989 - மருதகாசி, திரைப்படப் பாடலாசிரியர் (பி. 1920)
- 1993 - ஜே.ஆர்.டி.டாடா, இந்தியாவின் முதன்மையான தொழிலதிபர்களுள் ஒருவர், இந்திய வானூர்திப் போக்குவரத்தின் முன்னோடி (பி. 1904)
- 2008 - ஜோர்ன் அட்சன், டென்மார்க் கட்டிடக்கலைஞர் (பி. 1918)



1947 - பாலஸ்தீனத்தைப் பிரிப்பதென ஐ.நா. பொதுச் சபை முடிவெடுத்தது.



சம்பத் வங்கியின் சாவகச்சேரிக் கிளை கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சம்பத் வங்கியின் கடன் மீளப்பெறல் உதவிப் பொது முகாமையாளர் டினேஷ இகாலண்ட, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சம்பத் வங்கியின் கணனி வலையமைப்பு சிரேஷ்ட முகாமையாளர் இராஜேந்திர ரணசிங்க ஆகியோர் இணைந்து வங்கிக் கிளையை நாடாவை வெட்டி திறந்து வைப்பதையும் வங்கியின் முதலாவது வைப்பு செய்யப்படுவதையும் சாவகச்சேரி கிளை முகாமையாளர் பி.கிரிதரன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: போட்டோ ரவி(யாழ்.))

# தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் 500 பேருக்கு வீடமைப்புக் கடன்

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்.அலுவலகம் அடுத்தாண்டு 500 பேருக்கு வீடுகளை அமைக்க கடன்கள் வழங்கவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் கோரியிருப்பதாக தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் றோயல் ஜெயச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அரச கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு மூன்று இலட்சம் ரூபாவாகவும் தனியாருக்கு இரண்டு இலட்சம் ரூபாவாகவும் இக் கடன்கள் வழங்கப்படவுள்ளன. இவ்வீட்டுக் கடன்களை அரச பணியாளர்களுக்கு வழங்குவதற்கான செயற்பாடுகள் சகல பிரதேச செயலகங்களிலும் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி கடன் வழங்கப்படும் பயனாளிகள் பட்டியலிடப்பட வுள்ளதாகவும் தேசிய வீடமைப்பு அதிகார சபை மாவட்ட முகாமையாளர் தெரிவித் துள்ளார். (ச)

# கிணற்றுக்குள் வெள்ளம் குடிநீருக்குத் தட்டுப்பாடு


## செல்வாபுர மக்கள் திண்டாட்டம்

(கரவெட்டி)

கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையினால் செல்வாபுர கிராம மக்கள் குடிநீர்ப் பிரச்சினையால் பெரிதும் சிரமப்படுகின்றார்கள்.

இக் கிராமத்தில் ஒரு குடிநீர்க் கிணறு மட்டுமே உள்ளது.

இக் கிணற்றினுள் மழை வெள்ளம் உள்ளதால் அந்நீரைப் பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.



இதனையடுத்து பல மைல் தூரத்துக்குச் சென்று குடிநீரைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக கரவெட்டி பிரதேச செயலகத்தில் பலமுறை தொடர்பு கொண்டும் இம் மக்களின் பிரதான குடிநீர்ப்பிரச்சனை தீர்க்கப்படவில்லை என்றும் தொடரும் கனமழையினால் மேலும் பல சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ச-24)

# நலன்புரி முகாம்களிலுள்ள மக்கள் மழைவெள்ளத்தினால் அவலம்

(பொற்பதி)

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இன்றும் மீள்குடியேற்றம் செய்யப்படாது இராமாவில் நலன்புரி நிலையம் மற்றும் மணற்காடு இடைத்தங்கல் முகாம் ஆகியவற்றில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் பெரும் அவலங்களை எதிர்நோக்கியுள்ளனர். இவ்வாறு தங்கியுள்ள வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, போக்கரப்பு, சுண்டிக்குளம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக பெய்துவரும் கடும் மழை காரணமாக மணற்காடு இடைத்தங் கல் முகாமில் தங்கவைக்கப்பட்டிருக்கும் மக்கள் வீடுகளுக்குள் மழைநீர் புகுந்துள்ளது.

இதனால் இவர்களின் பொருட்களும் மழை வெள்ளத்தில் சேதமாகியுள்ளது.

இதனால் தமது பிள்ளைகளுக்கு உணவு தயாரித்து கொடுக்கமுடியாத நிலை உள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை மழைநீர் தேங்கி நிற்பதால் நுளம்புத்தொல்லை அதிகரித்துள்ளதுடன் மலசலகூடங்கள் வெள்ளத்தால் நிறைந்து காணப்படுவதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேபோன்றே இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களின் வீடுகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது.

இதனால் அவர்கள் சொல் லொணாத் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்.

எனவே தாம் அனுபவிக்கும் கஷ்டத்தை கருத்திற்கொண்டு தம்மை விரைவாக மீள்குடியேற்றம் செய்ய உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென முகாம்களில் வசித்து வரும் மக்கள் தெரிவித்தனர். (ச-64)

# நூல் அறிமுக விழா

(கொழும்புத்துறை)

பேராசிரியர் அருட்பணி ஞா.பிலேந்திரன் அடிகளாரின் முயற்சியில் தொகுக்கப்பட்ட அருளாளர் ஜோசவ்வாஸ் அடிகளாரின் வாழ்வும் பணியும் என்னும் தமிழாக்க நூல் அறிமுக விழா இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெறும்.

அருட்பணி எஸ்.ஜீ. பெரேராவின் ஜோசவ்வாஸ் அடிகள் எழுதிய ஆங்கில நூலே மொழி பெயர்ப்பு செய்யப்பட்டதாக யாழ். மறை மாவட்ட குருக்கள் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர். (ச-51)




# வன்னி மாணவர்களுக்கு உதவ பாடசாலை உபகரணங்கள் சேகரிப்பு

(கொழும்புத்துறை)

வன்னி மாணவர்களுக்காக யாழ். மறை மாவட்ட இளையோர் ஒன்றியத்தினால் யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களிலும் நிதி மற்றும் பாடசாலை உபகரணங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இவர்களுக்கு உதவி செய்ய விரும்புவோர் யாழ். மறைக்கல்வி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் .மறை மாவட்ட இளையோர் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ். மறை மாவட்டத்திலுள்ள இளையோர் கழகங்கள் பலவும் வன்னி மாணவர்களுக்கு உதவும் நோக்கில் நிதி மற்றும் பாடசாலை உபகரணங்களை அன்பளிப்புச் செய்து வருகின்றன.

குறிப்பாக யாழ். மரியன்னை பேராலய இளைஞர்கள் விஸ்வமடுப்பகுதி மாணவர்களுக்கு உதவி செய்வதற்காக கரோல் நிகழ்வுகளை நடத்தி நிதி சேகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ச-51)

# ஆபாசப்பட சீ.டிக்களை விற்கும் நடமாடும் வியாபாரிகள்

(கொழும்புத்துறை)

திடீரெனத் தோன்றும் திரைப்பட இறுவெட்டு விற்பனை செய்யும் வியாபாரிகளால் கலாசார சீரழிவான படங்களும் விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரிய வருகிறது. நூறு ரூபாய்க்கு மூன்று என்று அவை விற்பனை செய்யப்படுவதாகவும் அத்துடன் கலாசார சீரழிவான படங்களை உள்ளடக்கிய மெமறிக் காட்டுகளும் 350 ரூபா தொடக்கம் 500 ரூபா வரைக்கும் விற்பனை செய்யப்பட்டும் வருவதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக பாடசாலை முடியும் நேரத்தில் இந்த நடை வியாபாரிகள் மலிவு விற்பனையில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மாணவ சமுதாயம் சீரழிவுகளை மேலும் மேலும் எதிர்கொள்ளும் அபாயம் தோன்றியுள்ள்தாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கொழும்புத்துறை பகுதிகளிலேயே இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுவதாக கூறப்பட்டது. (ச-51)

## பருத்தித்துறை முனைப் பகுதியில்

# கடற் கொந்தளிப்பையடுத்து மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை முனைக் கடற்பகுதியில் கடும் காற்று மற்றும் கடற்கொந்தளிப்பு காரணமாக கடந்த இருதினங்கள் மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லவில்லை. இதேவேளை பருத்தித்துறை கடற்பகுதியில் தொழிலுக்குச் சென்ற மூன்று மீனவர்கள் கடற்கொந்தழிப்புக் காரணமாக படகு கவிழ்ந்ததில் கடலில் குதித்து மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்தே கடற்றொழிலுக்கு மீனவர்கள் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு நடைபெற்றுள்ளது. இச்சம்பவத்தில் ஞா.குணசீலன் (வயது-48), அ.பர்மேந்திரம் (வயது-27), ச.அருமை (வயது-48) ஆகியோரே இச்சம்பவத்தில் சிக்குண்டவர்களாவர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, 15 கடல் மைல் தூரத்தில் மூன்று மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை கடற்கொந்தழிப்பினால் படகு கவிழ்ந்தது. இதனால் மீனவர்கள் கடலில் குதித்து பரல்களின் உதவியுடன் கரைக்கு வந்து சேர்ந்தனர். (ச-10)

வேறுபாடு எதுவும் இன்றி அனைத்தையும் தூய்மையாக்கும் தண்ணீரைப் போன்றது, வாழ்க்கையும் நல்லறமும். *~கௌதம புத்தர்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அரச நியமனங்களிலும் இன, மதப் பாகுபாட்டு ஆதிக்கமா?

நாட்டில் நல்லாட்சி நிலவ வேண்டுமாயின் அரசியல் தலையீடற்ற அரச நிர்வாகம் இயங்க வேண்டும். அரசியல் தலையீடு இருக்குமாயின் அரச அதிகாரிகள் நேர்மையாக பணியாற்ற முடியாமல் போகும்.

அதிலும் அரச நியமனங்களில் 'அரசியல்' தலையீடு செய்யுமாயின் நிலைமை மிக மோசமாக பாதிப்படையும் என்பதோடு திறமையானவர்களுக்கு நியமனங்கள் கிடைக்காமல் போகும் வாய்ப்பும் உருவாகும்.

இதன் காரணமாகவே போட்டிப் பரீட்சை மூலம் நியமனங்கள் வழங்கும் நடைமுறை கொண்டு வரப்பட்டது.

எனினும் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவது தொடக்கம் பரீட்சையை நடத்துவது, பெறுபேற்றின் அடிப்படையில் நேர்முகத் தேர்வை செய்து முடிப்பது, நியமனம் வழங்குவது வரையான நடவடிக்கைக்கு சில வருடங்கள் கடந்து போவது மிகப்பெரும் துரதிர்ஷ்டமே.

இருந்தும் திணைக்களங்களில் இருக்கக்கூடிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதும் அதற்கான போட்டிப் பரீட்சைகளை விரைவாக நடத்துவதும் கட்டாயமானதாகும்.

எனினும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் பாடசாலைகளுக்கான கல்விசாரா ஊழியர்களுக்கு இருக்கக்கூடிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பம் கோரப்பட்டிருந்த நிலையில்,

மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் அமைச்சர் ஒருவர் போட்டிப் பரீட்சை இல்லாதவாறு நியமனங்களை வழங்குவதற்கான கோரிக்கையை விடுத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அதேநேரம் மன்னார் மாவட்டத்தில் அத்தகைய நியமனங்களை வழங்குவதற்கான அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இத்தகைய நிலைமைகள் இனம்,மதம் சார்ந்த பேதங்களை உருவாக்குவதற்கு வாய்ப்பளிப்பதோடு, ஏனைய மாவட்டங்கள் பாதிப்படையும் நிலையும் ஏற்படும்.

ஆகவே நியமனங்களை நிரப்புவதில் அரசியல் தலையீடுகளைத் தவிர்த்து தாபனக் கோவைப் பிரமாணங்களின் அடிப்படையில் நியமனங்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதே சிறந்ததாகும்.

இதனை வட பகுதியின் பாராளுமன்றப் பிரதிநிதிகள் வலியுறுத்தவேண்டும்.

போட்டிப்பரீட்சை இல்லாது மன்னார் மாவட்டத்தில் நியமனங்களை வழங்குவதற்கு மன்னார் மாவட்டத்தின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நடவடிக்கை எடுக்க முடியுமெனில்,வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் அத்தகைய நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுப்பதற்கு ஏன் முடியாது?

எதற்கும் எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களும் நாட்டில் என்ன நடக்கிறது?ஏது நடக்கிறது? என்பதை அறிந்து கொள்ள முற்படுவது நல்லது.

# அம்பாந்தோட்டையில் முதலீடு செய்ய இந்தியா ஊக்குவிக்கும் - கிருஷ்ணா

அம்பாந்தோட்டைபகுதியிலுள்ளகைத்தொழில் மற்றும் வர்த்தக வாய்ப்புகளை இந்தியா பயன்படுத்துவதுடன் அம்பாந்தோட்டையில் முதலீடு செய்யும் வாய்ப்பின் மூலம் அப் பகுதி அபிவிருத்தியில் இந்திய தனியார் துறையினர் பங்குற்றுவதை இந்தியா ஊக்குவிக்கும் என இந்தியவெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இந்திய உதவி தூதுவராலயத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், அம்பாந்தோட்டை பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்காக தனியார் துறையினரை இந்தியா ஊக்குவிக்கும். இந்திய உதவி தூதுவராலயத்தின் ஊடாக இரு நாட்டுக்குமான உறவு கட்டியெழுப்பப்படும் என எதிர்பார்க்கின்றேன் எனவும், பாதிப்படைந்துள்ள தென் மாகாண புகையிரத சேவையில் காலி முதல் மாத்தறை வரையான பகுதியை மீள்புனர் நிர்மாணம் செய்வதை இந்தியா பொறுப்பேற்றுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்திருப்பதானது நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு அரியதொரு சந்தர்ப்பத்தை இலங்கை அரசாங்கத்திற்கு பெற்றுக் கொடுத்திருப்பதாக இந்தியா தெரிவிக்கின்றது என இந்தியச் செய்தி நிறுவனமான பி.ரி.ஐ.குறிப்பிட்டுள்ளது.



புரிந்துணர்வு மற்றும் பரஸ்பர விட்டுக்கொடுப்பின் அடிப்படையில் இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு அமைய வேண்டும் எனவும் அத் தீர்வு உண்மையான தேசிய நல்லிணக்கத்திற்கு வழி வகுக்க வேண்டும் எனவும் இந்தியா நம்பிக்கை வெளியிட்டுள்ளதாக இச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.(ந-5)

# சர்வதேச எயிட்ஸ் தினம் கட்டுரை முடிபுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

சர்வதேச HIV/AIDS தினத்தையொட்டி யாழ்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டி முடிபுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**பாடசாலை மாணவர்களுக்குரியது**

முதலாம் இடம்: உதயகுமார் அகிலன் அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி, 2ஆம் இடம்: விஜயபர்ஸ்கரசர்மா திவாகரன் இணுவில் மத்திய கல்லூரி, 3ஆம் இடம்:திருநாவுக்கரசு துவாரகன் யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.

**ஆறுதல் பரிசு பெறுவோர்**

மோகனரூபினி அமிர்தலிங்கம் யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, நவரத்தினம் சோபிகா யா/இந்து மகளிர் கல்லூரி, சரண்ஜா தர்மரத்தினம் யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம், ஜான்சா செல்வகுமார் யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், கௌதமி யோகநாதன் யா/மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி.

**பிரிவு 2 : திறந்த போட்டி**

முதலாம் இடம்: பரராஜசிங்கம் இராஜேஸ்வரன் ஆசிரியர்,யா/கொக்குவில் இந்துக்கல்லூரி, 2ஆம் இடம்: தேவமதி ஜோசேப் மாகியப்பட்டி,சண்டிலிப்பாய், 3ஆம் இடம்: சிற்றம்பலம் சிவஞானராஜா கொக்குவில் மேற்கு,

**ஆறுதல் பரிசுகள்**

பசுபதி உதயகுமார் அளவெட்டி,அ.எட்வின் பீரிஸ் அந்தோனியார் வீதி,பண்டத்தரிப்பு, திருமதி மாலாதேவி மதிவதனன் அளவெட்டி மத்தி,திருமதி ஆரபி சிவகுகன் ஆசிரியை,கொக்குவில் இந்துக் கல்லூரி,கந்தசாமி கோவிந்தராசா காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

மேற்குறிப்பிட்ட வெற்றியாளர்கள் தங்களது பரிசில்களையும் சான்றிதழ்களையும் எதிர்வரும் புதன்கிழமை (01.12.2010) காலை 9.30 மணிக்கு சொர்ணாம்பிகை மண்டபம் தியாகி அறக்கொடை நிறுவனம், இல.527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெறவுள்ள சர்வதேச HIV/AIDS தின நிகழ்வில் கலந்துகொண்டு பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். போட்டியில் பங்குபற்றிய ஏனையோருக்கான சான்றிதழ்கள் நிகழ்வில் வைத்து வழங்கப்படும்.

முதலாம் பரிசாக பத்தாயிரம் ரூபாயும் இரண்டாம் பரிசாக ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாயும்,மூன்றாம் பரிசாக ஐயாயிரம் ரூபாயும் ஆறுதல் பரிசு தலா இரண்டாயிரம் ரூபாயும் வழங்கப்படும். (ந)

# நாடு முழுவதும் கடும் மழை 53 ஆயிரம் பேர் பாதிப்பு

நாடு முழுவதும் பெய்து வரும் கடும் மழையால் 53 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 4 ஆயிரத்து 380 இற்கும் மேற்பட்டவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இவர்களுக்காக 25 தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப்பணிபாளர் பிரதீப் கொடிப்பிலி கூறியுள்ளார்.

கடும் மழையால் இடம்பெயர்ந்த மக்களுக்காக புத்தளத்தில் 13 முகாம்களும், யாழ்ப்பாணத்தில் 7 முகாம்களும், வவுனியா மற்றும் கம்பகா மாவட்டங்களில் தலா இரண்டு முகாம்களும் நுவரெலியாவில் ஒரு முகாமும் அமைக்கப்பட்டுள்ளன.

அனர்த்தங்களில் சிக்கி இருவர் உயிரிழந்தமை தொடர்பாகவும், 5 பேருக்கு காயம் ஏற்பட்டுள்ளமை தொடர் பாகவும் தகவல் கிடைத்துள்ளது என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

61 வீடுகள் முற்றாக அழிந்துள்ளதாகவும், 261 வீடுகள் பகுதி அளவில் தேசமடைந்துள்ளதர்கவும் இந்நிதியத்தின் உதவிப்பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மாத்தறை உப்புவெலை களப்பிட்டிய பிரதேசத்தில் மண்சரிவு அபாயம் நிலவுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.குறிப்பிட்ட பகுதியில் உள்ள சுமார் 20 வீடுகளின் சுவர்களில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக மாத்தறை மாவட்ட இடர் முகாமைத்துவ அதிகாரி இன்டிக்கா ரணசிங்க கூறியுள்ளார்.

(எ-2)

# சுவாமி விவேகானந்தரின் எழுமின்! விழிமின்!



ஆற்றல்மிக்க இளமைப் பருவத்தை பெற்றுள்ள உங்களுக்கு இந்த இளமைக் காலமே பொன்னான நேரமாகும். வலுவிழந்து, தேய்ந்து, மாய்ந்து, இளமைத்துடிப்பு அறவே ஓய்ந்து தளர்ந்து கிடக்கும் முதுமைக்காலமன்று.வாலிபத்தின் வளமையும்,புத்துணர்ச்சியும் மிக்க இளமைக் காலமே உழைப்பதற்கு உகந்த காலமாகும். உழைப்பு! ஆம்! அதற்கு இதுவே பொன்னான நேரம்! அன்றலர்ந்ததும்,பிறரால் தொடப்படாததும்,நுகரப்படாததுமான புத்தம் புதிய மலர்களே இறைவனின் பாதக்கமலங்களில் இடுதற்குரிய தகுதி பெற்றவை. இறைவனும் அவற்றையே விரும்பி ஏற்கிறான்.

புத்துணர்ச்சி! பெறுங்கள்! விழித்தெழுங்கள்! காலம் மிகவும் குறுகியது. வழக்கறிஞர்களாக வருவதைக் காட்டிலும், பின்னர் சண்டை சச்சரவுகளைத் தேடி திரிவதைக் காட்டிலும் உங்களுக்கு செயலாற்றுவதற்கு மகத்தான பணிகள் காத்து நிற்கின்றன.எல்லாவற்றையும்விட நீங்கள் ஆற்றப்போகும் மிகப் பெரியதொரு வேலை எது தெரியுமா? நீங்கள் பிறந்த இனத்தின் மேன்மைக்காக, மனித சமுதாயத்தின் நன்மைக்காக, இந்த மாபெரும் தொண்டிற்காக உங்களை அர்ப்பணித்துக்கொள்கிற தியாகந்தான் அந்தப் புனித வேலை.

# இந்திய அரசு வழங்கிய நிதியுதவி சரியாக பயன்படுத்தப்படுகிறதா?

## கனிமொழி எம்.பி கேள்வி



இலங்கையில் தமிழர் புனரமைப்புப் பணிகள் இந்திய அரசுக்கு திருப்தி அளிக்கிறதா என ராஜ்ய சபாவில் கனிமொழி எம்.பி. கேள்வி எழுப்பினார்.

இலங்கையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு வீடு கட்ட மத்திய அரசு வழங்கியுள்ள பணத்தை இலங்கை அரசு சரிவர பயன்படுத்தி வருகிறதா? அந்தப் பணிகள் இந்திய அரசுக்கு திருப்தி அளிக்கிறதா? இலங்கை தமிழர்களுக்கு சம அதிகாரம் வழங்க வகை செய்யும் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த இலங்கை அரசு தயாராக உள்ளதா என்று கனிமொழி எம்.பி. ராஜ்யசபாவில் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்த கேள்விகளுக்கு மத்திய வெளியுறவுத்துறை இணையமைச்சர் பிரனீத் பதிலளிக்கையில்,

இலங்கையில் இடம்பெயர்ந்த இலங்கை தமிழர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க இந்திய அரசு முன் வந்துள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் முகாம்களில் உள்ள அனைத்து தமிழர்களும் மறுகுடியேற்றம் செய்யப்பட்டு விடுவர் என்று இலங்கை ஜனாதிபதி உறுதி வழங்கியுள்ளார்.

தமிழர் அமைப்புகள் மற்றும் பிறரையும் இணைத்து அதிகார பரவல் குறித்து இலங்கை அரசு பேச்சு நடத்த வேண்டும் என்று இந்தியா தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் இந்தியா வந்த இலங்கை ஜனாதிபதி அனைத்து சமுதாயத்தினரும் ஏற்றுக்கொள்ளும் அரசியல் தீர்வுகாண முயற்சி எடுப்பதாக அவர் கூறினார். (எ-5-2)

# நிவாரணம் வழங்க வலியுறுத்தி ஐக்கிய தேசிய கட்சி ஆர்ப்பாட்டம்

மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தி ஐக்கிய தேசிய கட்சி பட்டா ரவளையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தி யுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசிய ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க மக் களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் வர்க்கத்தினருக்கான சம் பள உயர்வை வழங்க அரசாங்கம் தவறியுள்ளதாகவும் குறிப்பாக பெருந் தோட்டப் தொழிலாளர்கள் சிரமத்துக்கு மத்தியில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பெருந் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்க்கைச் சுமை அதிகரித்துள்ளதாகவும் அவர்களின் பிரச்சினை தீர்த்து வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் திஸ்ஸ அத்த நாயக்க குறிப்பிட்டுள்ளார்.மிகவும் அநீதியான முறையில் அரசாங் கம் வரிகளை விதித்து வருவதாகத் தெரிவித்த அவர் அதற்கு எதிராக ஐ.தே.கட்சி நாடளா விய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்த உள்ளதாகவும் கூறியுள்ளார். (எ-2)

# கிருஷ்ணாவுடனான சந்திப்பு இரத்து தமிழ்க்கட்சிகளின் அரங்கம் அறிவிப்பு

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணாவுக்கும் தமிழ்க் கட்சிகள் அரங்கத்திற்கும் இடையில் நேற்று நடைபெற இருந்த சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் செய லாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே . சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ் கட்சிகள் அரங்கத்துடனான சந்திப்பில் ஈடுபடுவதற்கு எஸ். எம். கிருஷ்ணாவுக்கு நேரமின்மை உள்ளதாலேயே அவருடனான சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதனால் இந்தச் சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த நிலையில் இன்று திங்கட்கிழமை இந்தியத் தூதுவர் ஊடாக எஸ்.எம். கிருஷ்ணாவுக்கு மகஜரொன்று அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (சு-5-2)


## பாடசாலைக்கு அன்பளிப்பு

வடமராட்சி யா/அல்வாய் அம்பாள் வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியை திருமதி சந்திரா அம்பிகைபாலனின் பிறந்த நாளை முன்னிட்டு 25.11.2010 அன்று மேற்குறிப்பிட்ட பாடசாலை மாணவர்களின் நலன் கருதி ஒரு தொகைப் பணத்தினை வங்கியில் வைப்பு செய்ததையிட்டு அவ்வூர் மக்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

நலன்விரும்பிகள்

(சி-1698)



## 12 மாத காலத்தில் சரளமாக ஆங்கிலம் பேச விரும்புபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

இதோ விற்பனையாகிறது.....

PR Education a Tools PTY LTD-Australia இல் பதிவு செய்யப்பட்ட இந்த நிறுவனம் English பாடத்தை ஆசிரியரின் உதவியின்றி கற்கக்கூடிய முறையில் புதிய வழிமுறைகளைப் பயன்படுத்தி DVD மூலமாக உலகம் முழுவதும் விற்பனை செய்து வருகிறது. இதுவரைக்கும் பல்லாயிரக்கணக்கான இந்த ஆங்கில DVD க்கள் விற்பனையாகியுள்ளன.

இதுவரையில் தமிழர்களுக்கு ஆங்கிலத்தை இலகுவாகக் கற்றுக்கொள்ள இதுபோன்ற DVDக்கள் வெளிவரவில்லை. எனவே இது தமிழர்களுக்கு கிடைக்கப்பெற்ற ஓர் அரிய சந்தர்ப்பம். எனவே உங்கள் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள விரையுங்கள் . இந்த DVDக்களை பெற்றுக் கொள்ளும் இடங்கள்.

* பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
* ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
* அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
* கலாசேத்திரா நுண்கலை வளாகம். அம்மன் கோயிலடி, மின்சார நிலைய வீதி, ஊரெழு மேற்கு, ஊரெழு. தொ.பே-0217901991
* நிலா பதிப்பகம் கரவெட்டி தொ.பே-0212262048, 0773068761
* மொடோன், நெல்லியடி.

இந்த DVD க்களை கிராமங்கள் மற்றும் நகர் பகுதிகளில் சென்று விற்பனை செய்யக்கூடியவர்கள் தேவைப்படுகின்றனர். ஆர்வம் உள்ளவர்கள் எமது தொலைபேசி (0217901991) உடன் தொடர்பு கொள்ளவும். பின்னர் நேரில் அழைக்கப்படுவீர்கள். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ந.சிறிஸ்வரன்
உரும்பிராய் மேற்கு உரும்பிராய்.

(3135)


## திருத்தம்

28.11.2010 நேற்றைய தினம் 5ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட கனகலிங்கம் கனகம்மா என்பவருடைய மரண அறிவித்தலில், தகனக் கிரியைகள் 16.11.2010 இல் நடைபெற்றது எனத் தவறுதலாக இடம்பெற்றுவிட்டது. அதை 26.11.2010 என திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருகிறோம்.

## கரைதுறைபற்று பிரதேச சபை, முல்லைத்தீவு
## பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்கல்
## கேள்வி அறிவித்தல் - 2011

கரைதுறைபற்று பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் பொதுச்சந்தைகள், இறைச்சிக் கடைகளை 2011 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் மார்கழி மாதம் 31ஆம் திகதி வரைக்கும் குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 15.12.2010 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் திகதி: 16.12.2010 முற்பகல் 10.00 மணிவரை
கேள்வி திறக்கும் திகதி: 16.12.2010 பிற்பகல் 02.00 மணி

01. கேள்விப்பத்திரங்கள் 03 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியுடன் 02 பிரதிகளை செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில். கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியிலோ குறித்த நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
02. கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் தமது அடையாள அட்டையை கொண்டு வருதல் வேண்டும்.
03. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் -கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின் தெரியவரும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
04. கேள்விப்பத்திரங்களை கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கக் கூடிய வைப்புப்பணமும் செலுத்தி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
05. எந்தவொரு கேள்வியையும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலாளரிற்கு பூரண அதிகாரம் உண்டு. கேட்கப்பட்ட குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கேட்பவர்களின் கேள்விவைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவுசெய்யப்பட்டுள்ள கேள்விகாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியினை 22.12.2010ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றை செய்துகொள்ள வேண்டும்.
06. கேள்விப்பத்திரப் பணம், கேள்வித்தொகை, மாத வாடகை ஆகியவற்றிற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT), தேசத்தை கட்டியெழுப்பும் வரி (NBT) யும் மேலதிகமாக செலுத்தப்படல் வேண்டும்.

| இல | விடயம் | மாத வாடகை | கேள்விப் பத்திர கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|
| | **முல்லைத்தீவு உப அலுவலகம்** | | | | |
| 01 | முல்லைத்தீவு பொதுச்சந்தை | - | 1,000.00 | 10,000.00 | 200,000.00 |
| | **முள்ளியவளை உப அலுவலகம்** | | | | |
| 01 | தண்ணீரூற்றுப் பொதுச்சந்தை | - | 1,000.00 | 7,500.00 | 150,000.00 |
| 02 | முள்ளியவளை பொதுச்சந்தை | - | 1,000.00 | 5,000.00 | 100,000.00 |
| 03 | சிலாவத்தை பொதுச்சந்தை | | 1,000.00 | 2,000.00 | 10,000.00 |
| | **செம்மலை உப அலுவலகம்** | | | | |
| 01 | அளம்பில் பொதுச்சந்தை | - | 1,000.00 | 3,000.00 | 20,000.00 |
| | **மாட்டிறைச்சிக் கடைகள்** | | | | |
| 01 | முல்லைத்தீவு சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,000.00 | 10,000.00 | 200,000.00 |
| 02 | தண்ணீரூற்று சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,000.00 | 10,000.00 | 200,000.00 |
| 03 | முள்ளியவளை சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,000.00 | 5,000.00 | 75,000.00 |
| 04 | சிலாவத்தை சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 1,000.00 | 5,000.00 | 50,000.00 |
| 05 | அளம்பில் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,000.00 | 5,000.00 | 100,000.00 |

◎ மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

திரு.ஞா.தேவச்சந்திரன்,
செயலாளர்,
கரைதுறைபற்று பிரதேச சபை,
முல்லைத்தீவு.

கரைதுறைபற்று பிரதேச சபை,
முல்லைத்தீவு.
25.11.2010

(சி-1689)

# சதம் அடித்தனர் ஸ்ரொரஸ், குக்; வலுவான நிலையில் இங்கிலாந்து



(பிரிஸ்பேன்)

ஸ்ரோரஸ், குக் சதமடித்து அசத்த இங்கிலாந்து அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிபில் இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டையிழந்து 309 ஓட்டங்களை எடுத்து மீண்டது.

கிரிக்கெட் அரங்கில் பரம எதிரிகளான அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதும் ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெறுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 25 ஆம் திகதி பிரிஸ்பேனில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 260 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 481 ஓட்டங்களை எடுத்து 221 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றது.

இதில் மைக்கல் ஹசி 330 பந்துகளில் (26 பவுண்டரிகள், ஒரு சிக்கஸர் உட்பட) 195 ஓட்டங்களையும் பிரட் ஹடின் 287 பந்துகளில் (16 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 136 ஓட்டங்களையும் ஹட்ரிச் 50 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பின் 06 விக்கெட்டுக்களையும், அன்டர்ஸன், சுவான் ஆகியோர் தலா 02 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 221 ஓட்டங்களால் பின்நிலையிலிருந்த இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் விக்கெட் இழப்பின்றி 19 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு ஸ்ரொரஸ்- குக் ஜோடி பொறுப்பான இணைப்பாட்டத்தை வழங்கினர்.

இதில் ஸ்ரொரஸ் 110 பந்துகளிலும், குக் 112 பந்துகளிலும் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்ய இங்கிலாந்து அணி 100 ஓட்டங்களைக் கடந்தது.

இந்த ஜோடியைப் பிரிக்க அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொன்டிங் களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்தபோதும் பலனளிக்கவில்லை.

இதில் ஸ்ரொரஸ் 184 பந்துகளில் தனது 19 ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்திசெய்து அசத்தினார்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 188 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது அணித்தலைவர் ஸ்ரொரஸ் 224 பந்துகளில் (15 பவுண்டரிகள் உட்பட) 110 ஓட்டங்களை எடுத்து நோர்த்தின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் ஹடினால் ஸ்ரொம்ப் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த திரோட் சிறப்பான இணைப்பை வழங்க குக் 204 பந்துகளில் தனது 14 ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்திசெய்தார்.

இந்த ஜோடியின் இணைபிரியாத ஆட்டத்தின் மூலம்இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் முன்னிலை பெற்றது.

இதில் திரோட் 105 பந்துகளில் அரைச்சதம் பெற இங்கிலாந்து அணி நேற்றைய நான்



காம் நாள் ஆட்டநேர முடிபில் ஒரு விக்கெட்டையிழந்து 309 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் குக் 132 ஓட்டங்களுடனும், திரோட் 54 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளனர்.

இப் போட்டியின் ஐந்தாவது மற்றும் இறுதி நாள் ஆட்டம் இன்றாகும் இந்நிலையில் இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 09 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலுள்ளது.

# ஹோலி அதிரடிச் சதம் இந்தியா இலகு வெற்றி



(குவகாத்தி)

விராட் ஹோலி சதமடித்துக் கலக்க இந்திய அணி முதலாவது ஒருநாள் போட் டியில் 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலகுவாக வெற்றிபெற்றது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி மூன்று டெஸ்ட், ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் இந்திய அணி டெஸ்ட் தொடரை 1:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்நிலையில் ஐந்து போட்டிகள் கொண் ஒருநாள் தொடரின் முதலாவது போட்டி நேற்று குவகாத்தி நேரு விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இப் போட்டியில் இரு அணியிலும் முன்னணி வீரர்களுக்கு ஓய்வு வழங்கப்பட்ட நிலையில் இளம் அணியினர் களமிறங்கினர்.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணித்தலைவர் ரோஸ் ரெய்லர் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி விராட் ஹோலியின் அதிரடிச் சதத்தின் மூலம் இந்திய அணி 49 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 276 ஓட்டங்களை எடுத்தது.

இதில் விராட் ஹோலி 104 பந்துகளில் (10 பவுண்டரிகள் உட்பட) 105 ஓட்டங்களையும், யுவராஜ் சிங் 42, அணித்தலைவர் காம்பீர் 38 ஓட்டங்களையும் விஜய், யூசுப்பதான் ஆகியோர் தலா 29 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மைக்கேய் 04 விக்கெட்டுக்களையும், மில்ஸ் 03 விக்கெட்டுக்களையும் தௌப்பி 02 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்க 50 ஓவர்களில் 277 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி அஸ்வின், யுவராஜ் சுழலில் சிக்கி 45.2 ஓவர்களில் 236 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் அணித்தலைவர் ரோஸ் ரெய்லர் 69 பந்துகளில் (03 பவுண்டரிகள், 03 சிக்ஸர்கள் உட்பட) 66 ஓட்டங்களையும், மக்குலம் 35, மில்ஸ் 32, குப்தில் 30, வில்லியம்சன் 25 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சிறிசாந், அஸ்வின், யுவராஜ் சிங் ஆகியோர் தலா 03 விக்கெட்டுக்களையும் நெகரா 01 விக்கெட்டையும்



வீழ்த்தினர்.

இப் போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு அடித்தளமமைத்த விராட் ஹோலி ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம்இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நாளை மறுதினம் ஜெப்பூரில் நடைபெறும்.

# சச்சின், தோனிக்கு ரூபாய் 1.84 கோடி ஐ.பி.எல். ஏலத்தில் விலை நிர்ணயம்

நான்காவது ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கும் வீரர்களுக்கு ஏலத்தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சச்சின், தோனி, சேவாக் போன்றவர்களுக்கு 1.84 கோடி ரூபாய் அடிப்படை விலையாக நிர்ணயித்துள்ளனர்.

இந்தியன் பிரிமிய லீக் சார்பில் (ஐ.பி.எல்.) கடந்த மூன்று ஆண்டுகளாக இருபது-20 தொடர் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இதில் பங்கேற்ற வீரர்களின்ஒப்பந்தகாலம் முடிபடைந்ததால் நான்காவது தொடருக்காக வீரர்கள் ஏலம் விரைவில் நடக்கவுள்ளது.

கடந்தமுறை நடந்த ஏலத்தில் சச்சின், கங்குலி, டிராவிட், யுவராஜ் சிங் உள்ளிட்டவர்களுக்கு நட்சத்திர வீரர்கள் அந்தஸ்து கொடுக்கப்பட்டது.

இம்முறை வீரர்கள் தரத்தினைக் கொண்டு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி முதற் பிரிவில் சச்சின், தோனி, சேவாக், ஹார்பஜன் சிங் மற்றும் யுவராஜ் சிங் இடம்பெற்றுள்ளனர்.

இந்த வீரர்களுக்கு அடிப்படை விலையாக 1.84 கோடி ரூபாய் நிர்ணயித்துள்ளனர்.


இதில் சச்சின் (மும்பை இந்தியன்ஸ்) மற்றும் தோனியை (சென்னை சுப்பர் கிங்ஸ்) அந்தந்த அணிகள் தக்கவைத்துக்கொள்ள முடிபு செய்துள்ளன.

இரண்டாவது பிரிவில் இடம்பெற்றுள்ள வீரர்களுக்கு 1.3 கோடிரூபாய் அடிப்படை விலை. இதில் இருபது-20 ஸ்பெசலிஸ்ட் யூசுப்பதான், அனுபவ சுரேஸ்ரெய்ணா, வேகப்பந்து வீச்சாளர் சகிர்கான் இடம்பெற்றுள்ளனர்.

ஐ.பி.எல். இரண்டு மற்றும் மூன்றாவது தொடரில் சிறப்பாகச் செயல்படாத காம்பீர், விராட் ஹோலி, றொபின் உத்தப்பா, இர்ப்பான் பதான், ஆசிஸ் நெகரா, பிரவின் குமார், இசாந்த் சர்மா ஆகியோர் மூன்றாவது வகையில் இடம் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு அடிப்படை விலை 92 இலட்சம் ரூபாய். கடந்த முறை நட்சத்திர வீரர்களாக இருந்த கங்குலி, டிராவிட், கும்ளே, லஷ்மன் போன்றவர்கள் இந்தப்பிரிவில் தான் உள்ளனர்.

# பெக்காமை எவர்டன் கழகத்தில் இணைத்துக்கொள்ள முயற்சி




இங்கிலாந்து அணியின் நட்சத்திர கால்பந்தாட்டவீரர் டேவிட் பெக்காமை பிரபல கால்பந்தாட்டக் கழகமான எவர்டன் கழகத்தில் இணைத்துக்கொள்ள முயற்சி வருகிறது.

குறுகிய காலக் கடன் அடிப்படையில் தமது கழகத்துடன் இணைந்துகொள்ளுமாறு டேவிட் பெக்காமிற்கு எவர்டன் கழக முகாமையாளர் டேவிட் மோயிஸ் கேட்டுள்ளார்.

லொஸ் ஏஞ்சல்ஸின் லா கொலக்ஸி கழகத்தின் சார்பில் விளையாடிவரும் டேவிட் பெக்காம் கடந்த இரண்டு குளிர்ப் பருவகாலத்திலும் ஏ.சீ.மிலான் கழகத்தின் சார்பில் விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எவர்டன் கழகத்தில் இணைந்துகொள்ள விரும்பினால் டேவிட் பெக்காம் ஒரு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தினால் போதும் என டேவிட் மோயில் தெரிவித்துள்ளார்.

தற்போது எவர்டன் கழகத்தின் தலைவராக கடமையாற்றிவரும் பில் நெவிலும், டேவிட் பெக்காமும் ஒரு காலத்தில் மான் செஸ்டர் யுனைடட் கழகத்தின் சார்பில் விளையாடியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

டேவிட் பெக்காம் இங்கிலாந்து அணியின் சார்பில் இதுவரையில் 115 போட்டிகளில் விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் வருகிறார் சுசந்திகா

(கொழும்பு)

ஒலிம்பிக் வெள்ளிப்பதக்கம் வென்ற இலங்கை ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க மீண்டும் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலத்தில் சர்வதேச மெய்வல்லுநர்ப் போட்டிகளில் இலங்கையின் செயற்பாடுகள் மோசமான நிலையில் இருப்பதால் சுசந்திகா மீண்டும் போட்டிகளில் பங்குபற்ற விரும்புகிறார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோருடன் கலந்துரையாடியதன் பின்னர் இது தொடர்பான அறிவித்தலொன்றை விடுக்கவுள்ளதாக சுசந்திகா தெரிவித்துள்ளார்.

## கொழும்பிலிருந்து கிடைத்த தகவலால்

# சாவகச்சேரி வங்கியில் நடந்த கொள்ளை முயற்சி முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளையில் கூரையைப் பிரித்துக்கொண்டு உள்ளே இறங்கிய மூன்று பேர் அடங்கிய கொள்ளைக் கோஷ்டியின் கொள்ளை முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்தியத்திற்கான சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் காமினி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வங்கிக் கிளையின் தான் இயங்கி கொடுப்பனவு இயந்திரத்தை உடைத்து அதன் உள்ளே இருந்த பணத்தை கொள்ளையடிப்பதற்கு மூன்று பேர் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் முயற்சி மேற்கொண்டனர்.

முயற்சியின் போது பணம் வைக்கப்பட்டிருந்த இயந்திரத்தை கொள்ளையர்களால் உடைக்க முடியாமல் போனதாகவும் இந்த வங்கிக் கிளையில் கொள்ளையர்கள் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டிருந்தமை அங்கு பொருத்தப்பட்டிருக்கும் கமரா மூலமாக கொழும்பில் உள்ள தலைமையகத்தினர் அவதானித்து அது குறித்து யாழ்.பிராந்திய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து உடனடியாக விசேட பொலிஸ் குழுவொன்று அங்கு அனுப்பப் பட்டு சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாரின் வருகையை அறிந்ததும் கொள்ளையர்கள் மூவரில் இருவர் தப்பி ஓடி விட்டதாகவும் ஒருவர் மாத்திரமே கைது செய்யப்பட்டுள்ளார்.


கைது செய்யப்பட்டுள்ளவர் வழங்கிய தகவல்களையடுத்து தப்பியோடிய இருவரையும் கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் யாழ்.பிராந்தியத்திற்கான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் காமினி சில்வா தெரிவித்துள்ள்ளார். (ந-5)

## மீள்குடியேற்றப் பணிக்கு காலக்கெடு விதிக்கவில்லை

இலங்கையில் தமிழர்களை சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தும் பணியை முடிக்க இந்தியா காலக்கெடு ஏதும் விதிக்கவில்லை என இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்ட அவர் நேற்று தனது பயணத்தை முடித்துக்கொண்டு நாடுதிரும்பினார். இவ்விஜயம் குறித்து அவர் தெரிவிக்கையில்,

இலங்கைப்பயணம் முழு திருப்தி அளிக்கிறது. தமிழர்களை மீள்குடியமர்த்தும் பணியை விரைந்து முடிக்க வலியுறுத்தியுள்ளோம் இருப்பினும் இந்த விடயத்தில் இலங்கை அரசின் சௌகரியத்தை பொறுத்து இந்தப் பணிகளை மேற்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளோம். இதனால் மீள்குடியமர்த்தும் பணிக்கு காலக்கெடு எதனையும் விதிக்கவில்லை எனக் குறிப்பிட்டார். (ந-5)



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி தலைமையிலான குழுவினரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினரும் நேற்று இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக, விவசாய, பாதுகாப்பு தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டபோது...

## இலங்கை–பாகிஸ்தான்...

ஆகிய துறைகளில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கையெழுத்திடும் வைபவத்தில் விசா விவகாரம் தொடர்பான ஒப்பந்தத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்,பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் மஹ்மூத் குரேஷி ஆகியோர் கையெழுத்திட்டனர்.

ஏனைய 3 ஒப்பந்தங்களில் இலங்கையின் விவசாய அமைச்சின் செயலாளர் கே.ஈ. கருணாதிலக, சுங்க பணிப்பாளர் நாயகம் திருமதி சுதர்மா கருணாதிலக்க, நுண்கலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஜயசேன கோட்டேகொட ஆகியோருடன் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் திருமதி சீமா இலாஸிபலோச் கையெழுத்திட்டார்.

இலங்கை ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது பயங்கரவாதத்தை இலங்கை தோற்கடித்தமைக்கு பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி பாராட்டு தெரிவித்தார்.பாகிஸ்தானும் பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதேவேளை யுத்த காலத்தில் பாகிஸ்தான் அளித்த உதவிகளை இலங்கை எப்போதும் மறக்காது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறினார்.பாகிஸ்தான் விரைவில் தீவிரவாதிகளைத் தோற்கடிக்கும் என தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். (ந-5)

## புதைத்த கண்ணிவெடி...

பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, பொலனறுவை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் 1300 இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (ந-5)

## அவசரகாலச் சட்டம்...

சட்டம் நீடிக்கப்பட்டு வருவதாக தமிழ் அரசியல் கட்சிகள் அதிருப்தி வெளியிட்டிருந்தன.

எனினும் பயங்கரவாதத்தை முழுமையாக இல்லாதொழிக்கும் நோக்கில் அவசர காலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யுத்தத்தை வெற்றிகொள்வதற்காக படைவீரர்களின் எண்ணிக்கை 3 மடங்காக உயர்த்தப்பட்டதாகவும் யுத்தம் நிறைவடைந்த காரணத்தினால் அவர்களை வீட்டுக்கு அனுப்பி வைக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாகவே வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவுகள் உயர்வடைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-5)

## கொழும்பின் மையப்...

உல்லாச விடுதியொன்றை இந் நிறுவனம் நிர்மாணிக்கும்.

அதேவேளை படைத்தலைமையகம் உட்பட முப்படைகளின் தலைமையகங்களும் பத்தரமுல்லைப் பிரதேசத்தில் உள்ள அக்குராகொடப் பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய கட்டிடத் தொகுதிக்கு மாற்றப்படவுள் ளன.

கொழும்பின் மையப்பகுதியில் அமைந்துள்ள முப்படைகளின் தலைமையகங்களை அகற்றுவதன் மூலம் சுமார் 500 ஏக்கர் காணியை அபிவிருத்தி தேவைகளுக்காக பெறமுடியும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ந-5)

## ஜனாதிபதி மகிந்த...

பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பிரித்தானிய வெளிவிவகார அமைச்சின் பதில் எதுவும் அரசாங்கத்திற்கு இதுவரை கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்திப்பதற்கு பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனுக்கு நேரம் கிடைக்காது போனால் அந் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் அல்லது பிரதிப் பிரதமர் நிக் கிளேக்கை சந்திப்பதற்கு மகிந்த ராஜபக்ஷ முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இம் மாதம் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் ஒன்றியத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றவிருந்தார்.

ஆனால் பிரித்தானியாவுக்கு விஜயம் செய்யும் போது அவரை போர் குற்றச்சாட்டு மற்றும் மனித உரிமை மீறல்களின் பேரில் கைது செய்ய புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் அவரது பயணம் திடீரென ஒத்திவைக்கப்பட்டது.

ஆயினும் எத்தகைய அச்சுறுத்தல்கள் இருந்தாலும் தான் திட்டமிட்டபடி பிரித்தானியாவுக்கான விஜயத்தை மேற்கொள்வேன் என மகிந்த ராஜபக்ஷ சூளுரைத்திருந்தார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் கடந்த மாதம் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக்கை சந்தித்த போது இலங்கையின் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியிருந்தார்.

இந் நிலையில் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் வெறும் வார்த்தைகளை உதிர்த்து விட்டு நில்லாது ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து இலங்கையின் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதற்கு உந்துதலை ஏற்படுத்த வேண்டும்.

இலங்கையில் கடந்த வருடம் இடம்பெற்ற போரின்போது அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் எவ்வகையிலும் கழுவித்துடைக்கப்பட்டதாகவோ அல்லது மறக்கப்பட்டதாகவோ அமையக் கூடாது என **Guardian.co.uk** எனும் இணையத்தளத்தில் ஊடகவியலாளர் எலன் பேர்சன் என்பவர் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## தமிழ், முஸ்லிம் கட்சி...

இலங்கைக்கான நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு கொழும்பு சென்றிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தனது விஜயத்தின் இறுதி நாளான நேற்றுக்காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் கட்சிகளின் அரங்கம் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளை தனித்தனியாக சந்திப்பதாக இருந்தார்.

இச் சந்திப்புக்காக குறிப்பிட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் மனுக்களையும் தயாரித்துக்கொண்டு தயாராக இருந்தனர். இருந்த போதிலும் இச்சந்திப்பு இடம்பெறுவதற்கு சற்று முன்னர் இந்திய அமைச்சருக்கு சந்திப்புக்கு நேரம் இல்லை எனவும் அதனால் சந்திப்புக்கள் இரத்து செய்யப்படுவதாகவும் இந்தியத் தூதரகத்தினால் தெரிவிக்கப்பட்டது.

இக் குறிப்பிட்ட கட்சிகள் இறுதிவேளையில் சந்திப்பு இரத்து செய்யப்பட்டிருப்பதால் பெரும் ஏமாற்றம் அடைந்திருப்பதாக தெரிகின்றது.

நேற்றுக்காலை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியின் இல்லத்தில் கூடிய தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் பிரதிநிதிகள் அங்கிருந்து இந்திய அமைச்சரை சந்திப்பதற்காக புறப்பட தயாராக இருந்த வேளையிலேயே சந்திப்பு இரத்து செய்யப்பட்ட தகவல் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதனால் இந்திய அமைச்சரிடம் கையளிப்பதற்கு தயாராக கொண்டு சென்றிருந்த மனுவை இன்று இந்தியத் தூதரகத்தில் கையளிப்பது என தமிழ் கட்சிகளின் அரங்கம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை தன்னுடைய விஜயத்தின் இறுதி நாளான நேற்று அமைச்சர் கிருஷ்ணா தென் மாகாணத்திற்கு விஜத்தை மேற்கொண்டார்.

தென் மாகாணத்திற்கான விஜயத்தை அவர் மேற்கொள்வதாகவும் அதனாலேயே தமிழ்,முஸ்லிம் கட்சிகளுடனான சந்திப்பு இரத்து செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இலங்கைக்கான தன்னுடைய நான்கு நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று மாலை கிருஷ்ணா நாடு திரும்பினார். (ந-5)


**வெற்றி நிச்சயம் – 2011**

**பரீட்சை நேர மாற்றம்**

சீரற்ற காலநிலை காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை இடைநிறுத்தப்பட்ட 'வெற்றி நிச்சயம்' இரசாயனவியல் பரீட்சை இன்று (29.11.10) திங்கள் பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெறும்.

செயலாளர்,
பரீட்சைச் சபை

(சி-1697)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.